E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 ஜூலை 8 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 160 | Saturday 08, July, 2023 | 11 பக்கங்கள்

## லாப் Gas விலையும் நேற்று முதல் குறைப்பு

### 12.5Kg சிலிண்டர் 3,690 ஆனது



லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், 12.5 கிலோ நிறை கொண்ட சமையல் எரிவாயுவின் விலை 90 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. 06

புதிய திட்டங்களின் ஊடாக

## இலங்கை மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மாற்றப்படும்

### இந்திய சுற்றுலா சம்மேளன நிகழ்வில் ஜனாதிபதி உறுதி



அடுத்த தசாப்தத்தில் இலங்கைக்கு பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறையாக சுற்றுலாத்துறை மாற்றப்படுமென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையை கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலமாக மாற்ற ஏற்கெனவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் தனிநபர் வருமானத்தை அதிகரிக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (06) நடைபெற்ற 06

ஒலுவில் கடலரிப்பு பிரச்சினை

## ஆய்வுகள் சரியான முறையில் இடம்பெறாமையே காரணம்

### விரைவில் உரிய நடவடிக்கை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஒலுவில் துறைமுகப் பகுதியில் கடலரிப்பால் பாதிக்கப்படும் பிரதேசங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்படுமென்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற 06

## முதியோர், மாற்றுத்திறனாளிகள், சிறுநீரக நோயாளருக்கான அரச உதவிகள் தொடரும்

### புதிய அளவுகோல் அறிமுகப்படுத்தும்வரை தொடர ஜனாதிபதி பணிப்பு



சிறுநீரக நோயாளர்கள், விசேட தேவையுடையோர் மற்றும் முதியோர்களுக்கான கொடுப்பனவுகளை நடைமுறையிலுள்ள முறைமையின் கீழ் தொடர்ச்சியாக வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

புதிய அடிப்படை விதிகள் அறிமுகப்படுத்தப்படும்வரை இந்த முறைமை நடைமுறையில் இருக்குமென, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் நிலைமை மாறக்கூடிய, பாதிப்புக்குள்ளான, வறிய மற்றும் மிகவும் வறிய முதலான நான்கு சமூகக் குழு வகைப்படுத்தல்களின் கீழ் 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவுகளை வழங்கும் முறையில் மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாதெனவும், அவர் தெரிவித்தார்.

'அஸ்வெசும' கொடுப்பனவு தொடர்பாக எதிர்வரும் 10ஆம் திகதிவரை மேன்முறையீடுகளை மேற்கொள்ள காலஅவகாசம் 06

# 2023 வருட இறுதிக்குள் G.C.E உயர்தரப் பரீட்சை

### டிசம்பரில் நடத்தவிருந்த G.C.E O/L, 2024 முதல் காலாண்டில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இந்த வருட இறுதிக்குள் நடத்தப்படுவதுடன், எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவிருந்த சாதாரணதரப் பரீட்சை 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இவ்வாண்டு இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களிடமிருந்து பரீட்சை திணைக்களம் விண்ணப்பங்களை கோரியுள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன. அது நிறைவு பெற்றதும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமெனவும், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ஹரினி அமரசூரிய எம்.பி. எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர்,

"2023ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை இந்த வருட இறுதிக்குள் நடத்தப்படுவதுடன், எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள சாதாரணதரப் பரீட்சை 2024ஆம் ஆண்டின் 06

GCE உயர்தரப் பரீட்சை – 2023

## 28ஆம் திகதிக்கு முன் Online ஊடாக விண்ணப்பிக்கலாம்

### பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு




2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் நேற்று (07) முதல் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 28ஆம் 06

## இந்தியாவின் பாரிய முதலீட்டு வாய்ப்புகளுக்கு இலங்கை தயார்

### FICCI தலைவருடன் உயர்ஸ்தானிகர் மிலிந்த சந்தித்து பேச்சு



இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்திய தனியார்துறை தொழில் வல்லுநர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வரும் இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய வர்த்தக சபைகளின் கூட்டமைப்பு மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் (FICCI) தலைவர் சுப்ரகாந்த் பாண்டாவை (Subhrakant Panda) நேற்று முன்தினம் (06) புதுடெல்லியில் சந்தித்து கலந்துரையாடினார். 06



## உலகின் மிகவும் ஆபத்தான பறவை இலங்கையில்!

பொதுமக்கள் பார்வையிட சந்தர்ப்பம் 03

## சர்வேஸ்வர குருக்களுக்கு தமிழகத்தில் உயர் கௌரவம்

### சர்வதேச இந்துமதபீட செயலாளர் பாபு சர்மா வாழ்த்து



முத்தமிழ் குருமணி சுன்னாகம் சிவஸ்ரீ சர்வேஸ்வர குருக்கள் அண்மையில் தமிழகத்தில் தருமபுர ஆதீன அதி உயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஞானசம்பந்தர் இறைவனிடம் ஞானப்பால் அருந்தி முதல் திருமுறை பாடிய சீர்காழி திருத்தலத்தில், தருமபுரம் ஆதீனத்தால், ஆதீனத்தின் அதி உயர் விருதாகிய 06

தமது அரசியல், பொருளாதார செயற்பாடுகளுக்காக

## நாட்டில் இனவாதம் மீண்டும் உருவாகுவதை விரும்பும் சிலர்

### பாராளுமன்றில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சில தரப்பினருக்கு நாட்டில் மீண்டும் இனவாதம், மதவாதம் நெருக்கடிகளை தோற்றுவிக்க வேண்டிய அவசியம் காணப்படுவதாக, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதாரம் அத்தகைய செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளது என்றும் அவ்வாறான நெருக்கடிகளை ஏற்படுத்தினாலே அவர்களது அரசியலை தக்கவைக்க முடியும் என்ற நிலை காணப்படுவதாகவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

எமது நாட்டில் இனவாதம், மதவாதம் பிரச்சினைகள் கிடையாது. சில சில குழுக்களுக்கே அது அவசியமாக உள்ளது. அவர்களே அதனை கட்டியெழுப்ப பார்க்கின்றனர் என்றும், அவர் தெரிவித்தார். 06

இவ்வருடம் முதல் ஆறு மாதகாலத்தில்

## புலம்பெயர் தொழிலாளர்களால் 2,823.3 மில். டொலர் வருமானம்

### அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவிப்பு



இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் புலம்பெயர் தொழிலாளர்களால், இலங்கைக்கு 2,823.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதத்தில் உத்தியோகபூர்வ நடவடிக்கை மூலம் அனுப்பப்பட்ட தொழிலாளர்களின் பணம் 476 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது கடந்த ஜூன் 2022 இல் 274.3 மில்லியன் டொலர்களாகியது.

இந்த ஆண்டு மே மாதம் இலங்கைக்கு 479.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் 06

## 'அஸ்வெசும' திட்டத்தில் மலையகம் புறக்கணிப்பு

### பிரதமருடன் அரவிந்தகுமார் கலந்துரையாடல்



'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்தில், மலையக மக்களை உள்ளீர்ப்பதில் அரச ஊழியர்கள் உதாசீனப் போக்குடன் செயற்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடன் கலந்துரையாடியதாகவும், அவர் தெரிவித்தார். 06



அமரகீர்த்தி அத்துக்கோரள கொலை;

## சந்தேகநபர்கள் 32 பேரது விளக்கமறியல் நீடிப்பு

03



அரச தலைவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக இருந்த

## 'விசும்பாய' கட்டடம் உயர் ரக Boutique Hotelஆக மாற்றம்

ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது 03

## கிராம சேவகர்கள் அனைவரும் JP ஆகினர்

### அதிகாரம் வழங்கி வர்த்தமானி வெளியீடு

புதிய சமாதான நீதவான்களை நியமிப்பது தொடர்பாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நிரந்தர மற்றும் செயலூக்கமான சேவையிலுள்ள ஒவ்வொரு நிர்வாக கிராம உத்தியோகத்தரும் சமாதான நீதவானாக மாறுவார்கள். 06

## மின்சாரம் தாக்கியதில் கணவனும் மனைவியும் பலி

### கொலன்னாவை பகுதியில் பரிதாப சம்பவம்



மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி கணவனும் மனைவியும் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் கொழும்பு, கொலன்னாவை பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

படுக்கையறையில் பழுதடைந்த மின்விசிறியை திருத்திய 06

போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டு;

## நைஜீரிய பிரஜைக்கு மரண தண்டனை



போதைப்பொருளை வைத்திருந்த நைஜீரிய பிரஜை ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம் (06) மரண தண்டனை விதித்துள்ளது. இந்த நபர், கொக்கைன் போதைப்பொருளை 06

ஆயுத முனையில் அச்சுறுத்தி

## தயாசிறி மகனின் நகையை கொள்ளையிட்டவர் கைது



பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினுடைய மகனின் வெள்ளை தங்க நகையை கொள்ளையிட்ட சந்தேக நபரை தெஹிவளை பிரதேசத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபரால் திருடப்பட்ட நகையும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் பம்பலப்பிட்டி பிரதேசத்தில் பெண் தோழியுடன் காரிலிருந்த தயாசிறி ஜயசேகரவின் மகனை, சந்தேக நபர் 06

## ராகுல்காந்தி தாக்கல் செய்த மேன்முறையீடு மனு தள்ளுபடி

### 2 ஆண்டுகள் சிறைத்தண்டனை உறுதியானது



**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மீதான அவதூறு வழக்கில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்திக்கு இரண்டாண்டுகள் சிறைத்தண்டனையை குஜராத் உயர் நீதிமன்றம் உறுதிசெய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த அவதூறு வழக்கில் சூரத் நீதிமன்றம் விதித்த இரண்டாண்டுகள் தண்டனையை நிறுத்தி வைக்குமாறு, காங்கிரஸ் கட்சியின் 06

## மிஸ் கலிபோர்னியா பட்டம் வென்ற இலங்கை யுவதி!

### அமெரிக்க தூதுவர் டுவிட்டரில் பதிவு



அமெரிக்க வாழ் இலங்கை யுவதியான தாலியா பீரிஸ், மிஸ் கலிபோர்னியா டீன் யு.எஸ்.ஏ. 2023 (Miss Teen USA 2023) எனும் பட்டத்தை வென்றுள்ளார். இவருடனான சந்திப்பு தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் 06

# சர்வதேச செய்திகள்

## காலனித்துவ காலத்தில் எடுத்துச்செல்லப்பட்ட: இலங்கையின் அரும்பொருட்களை திருப்பி அளிக்கிறது நெதர்லாந்து

காலனித்துவ காலத்தில் இலங்கை மற்றும் இந்தோனேசியாவில் இருந்து எடுத்து வரப்பட்ட விலைமதிப்பற்ற நூற்றுக்கணக்கான கலைப்பொருட்களை நெதர்லாந்து திருப்பிக் கொடுக்கவுள்ளது.

இவ்வாறு திருப்பிக் கொடுக்கப்படவுள்ள பொருட்களில் இரத்தினம் பதிக்கப்பட்ட வெண்கலப் பீரங்கி மற்றும் "லோம்போக் புதையலில்" இருந்து கொள்ளையடிக்கப்பட்ட ஆபரணங்களும் அடங்கும்.

நாடுகள் அவைகளை கேட்டால் அரசு அந்தப் பொருட்களை திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அறிக்கை ஒன்று வலியுறுத்தியுள்ளது.

நெதர்லாந்து தனது கடந்த கால காலனித்துவம் தொடர்பில் அதிக எதிர்ப்பை எதிர்கொண்டு வரும் சூழலிலேயே இந்தப் பொருட்களை திருப்பிக் கொடுப்பதற்கு இணங்கியுள்ளது.

மற்ற நாடுகளும் களவாடப்பட்ட கலைப் பொருட்களை அண்மைய ஆண்டுகளில் திருப்பிக் கொடுத்து வருகின்றன. குறிப்பாக 1897 இல் பிரிட்டிஷ் இராணுவம் பெரும் அளவு விரிவாக்கம் செய்யப்பட்டபோது நைஜீரியாவில் இந்து திருடப்பட்ட பெனின் வெண்கலங்கள் திருப்பி அளிக்க பிரிட்டிஷ் மற்றும் ஜெர்மனி அருங்காட்சியகங்கள் கையொப்பமிட்டிருந்தன.

"நெதர்லாந்துக்கு உரித்தாகாத பொருட்களை நாம் திருப்பி அளிப்பது இது முதல் முறையாகும்" என்று அந்நாட்டு கலாசார அமைச்சர் குனாய் உஸ்லு தெரிவித்துள்ளார்.



"ஆனால் நாம் பொருட்களை திருப்பி அளிப்பதை மாத்திரம் செய்யவில்லை. இந்தோனேசியா மற்றும் இலங்கையுடன் அதிகம் ஒத்துழைப்பை வெளிக்காட்டும் காலத்தை நாம் ஆரம்பிக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது ஆம்ஸ்டர்டாமில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட 18 ஆம் நூற்றாண்டின் வெண்கல பீரங்கி ஒன்று இலங்கைக்கு திருப்பி அளிக்கப்படவுள்ளது. இது 1740 இல் கண்டி மன்னருக்கு இலங்கை பிரபு ஒருவரால் பரிசாக வழங்கப்பட்டது என்று நம்பப்படுகிறது.

இலங்கையின் கண்டி இராச்சியத்தின் மீது தாக்குதல் நடத்தி ஆக்கிமிப்பை தொடுத்த டச்சு துருப்புகளால் 1765 இல் இந்த பீரங்கி கைப்பற்றப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதில் இந்தோனேசிய அரச மாளிகையில் இருந்து 1894 ஆம் அண்டு டச்சு காலனி இராணுவத்தால் கொள்ளையிடப்பட்ட "லோம்போக் புதையல்" என அழைக்கப்படும் ஆபரணங்கள், விலையுயர்ந்த கற்கள், தங்கம் மற்றும் வெள்ளி ஆகிய சேகரிப்புகளும் திருப்பி அளிக்கப்படவுள்ளன.

காலனித்துவ காலத்தில் பெறப்பட்ட கலைப்பொருட்கள் தொடர்பில் விசாரணை நடத்திய குழு ஒன்று 2020 ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய அரசு செயற்படுகிறது என்று கலாசார அமைச்சர் உஸ்லு தெரிவித்துள்ளார்.

டச்சு காலனிகளில் இருந்து கொள்ளையிடப்பட்ட எந்த ஒரு பொருளையும் அதன் மூல நாடு கோரும் பட்சத்தில் நிபந்தனையின்றி அதனை திருப்பிக் கொடுக்க முன் வர வேண்டும் என்று அந்த அறிக்கையில் அரசுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

"காலனித்துவத்தில் சேகரிக்கப்பட்ட இந்த அநீதியை ஏற்று நிவர்த்தி செய்வதை முக்கிய கொள்கையாக மாற்றுவதன் மூலம் நெதர்லாந்து தனது காலனித்துவ கடந்த காலத்திற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நாடு அண்மைய ஆண்டுகளில் தனது கடந்த கால வரலாற்றுடன் வெளிப்படையாக போராடி வருகிறது.

அடிமை வர்த்தகத்தில் நெதர்லாந்தின் பங்கு தொடர்பில் அந்நாட்டு மன்னர் வில்லியம் அலெக்சாண்டர் கடந்த சனிக்கிழமை (01) உத்தியோகபூர்வமாக மன்னிப்புக் கோட்டிருந்தார். தாம் தனிப்பட்ட முறையிலும் தீவிரமாகவும் பாதிக்கப்படுவதாக உணர்கிறேன் என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

17 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் மிகப்பெரிய காலனித்துவ சக்தியாக உருவெடுத்த நெதர்லாந்து உலகெங்கும் பல நிலங்களைக் கைப்பற்றியதோடு டச்சு அடிமை வர்த்தகத்தின் மூலம் 600,000க்கும் அதிகமான மக்கள் கடத்திச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலிய வீரரை கொன்ற பலஸ்தீனர் சுட்டுக் கொலை



சட்டவிரோத குடியிருப்பு ஒன்றில் சூடு நடத்தி இஸ்ரேலிய படை வீரர் ஒருவரை கொன்ற பலஸ்தீனர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

ஜெனின் நகரில் கடந்த இரு நாட்கள் இடம்பெற்ற இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைக்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸ் தெரிவித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் கெடுமிம் குடியேற்றத்திற்கு அருகில் பாதுகாப்பு படையினரால் தடுக்கப்பட்டதை அடுத்தே தாக்குதல்தாரி சூடு நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இந்த துப்பாக்கிச் சூட்டில் இஸ்ரேலிய வீரர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

இதன்போது தாக்குதல்தாரி அங்கிருந்து தப்பிச் சென்றபோதும் பின்தொடர்ந்து தடுக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

இதில் மேற்குக் கரையில் உள்ள ரமல்லா நகரின் மேற்காக கிப்யா கிராமத்தைச் சேர்ந்த அஹமது யாசின் ஹிலால் கிதான் என்ற ஆடவரே கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வாபா அடையாளம் கண்டுள்ளது.

இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றிருக்கும் முற்றுகையில் உள்ள காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பு, தனது உறுப்பினர் ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தியதாக தெரிவித்துள்ளது.

"ஜெனின் படுகொலை எமது மக்களின் எதிர்ப்புப் போராட்டத்தையே வலுப்பெறச் செய்யும் என்பதை எதிரிகள் அறிந்துகொள்வார்கள். விடுதலை வரை இது முன்னெடுக்கப்படும்" என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

சன நெரிசல் மிக்க ஜெனின் அகதி முகாமில் இஸ்ரேல் இராணுவத்தின் ஆளில்லா விமானத் தாக்குதல் மற்றும் தரைவழி நடவடிக்கையில் மூன்று சிறுவர்கள் உட்பட 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் இஸ்ரேலிய படை வீரர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

இதேவேளை ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேல் நேற்று (07) நடத்திய சுற்றிவளைப்பில் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

## 2ஆம் உலகப் போரின் சீக்கிய வீரருக்கு விருது



இரண்டாம் உலகப் போரில் பங்குபற்றி இன்றும் உயிர்வாழும் சீக்கிய வீரர்களில் ஒருவரான ராஜிந்தர் சிங் தாத்துக்கு பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் "பொண்ட்ஸ் ஒப் லைட்" என்ற சிறப்பு விருதை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

ட்வுனிங் ஸ்ட்ரீட்டில் இந்திய உலகளாவிய மன்றம் ஏற்பாடு செய்த பிரித்தானிய– இந்திய வார வரவேற்பு நிகழ்ச்சியின் போது 101 வயது நிரம்பியுள்ள இச்சீக்கிய வீரருக்கு இந்த உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போரின் போது இவரது அர்ப்பணிப்புக்கள், வீரம், படை வீரர்களுடன் இணைந்து அளித்த ஆதரவு உள்ளிட்ட குறிப்பிடத்தக்க சேவைகள் பாராட்டப்பட்டுள்ளது.

1963 முதல் தென் மேற்கு இலண்டனில் வசிக்கும் ராஜிந்தர் சிங், இரண்டாம் உலகப் போர் காலத்தில் நேச நாட்டுப் படைகளுடன் இணைந்து போரில் பங்குபற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதியோர் இல்லத்தில் தீ: அறுவர் உயிரிழப்பு



இத்தாலியின் மிலான் நகரில் உள்ள முதியோர் இல்லத்தில் நேற்று (7) அதிகாலை மூண்ட தீச்சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

புகையைச் சுவாசித்த பல முதியவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தீயணைப்பாளர்கள் கட்டடத்திலிருந்து பலரைக் காப்பாற்றியதாகத் தீயணைப்புத் துறை அதன் ட்விட்டர் தளத்தில் பதிவிட்டது.

அந்த முதியோர் இல்லத்தில் 210 முதியவர்கள் வசித்து வந்தனர். தீ மூண்டதற்கான காரணம் சரியாகத் தெரியவில்லை என்று தீயணைப்புத் துறை கூறியது. உயிரிழந்தவர்களில் ஐவர் 69க்கும் 87க்கும் இடைப்பட்ட வயதுடைய பெண்களாவர். ஆறாவது நபர் 73 வயது ஆடவராவர். முதியோர் இல்லத்தின் அறை ஒன்றில் தீ மூண்டதாக நம்பப்படுகிறது.

## ஈரானில் கடும் மணல் புயல்: 800 பேர் மருத்துவமனையில்



ஈரானில் மோசமான மணல் புயல் வீசுகிறது. இதனால் கடந்த 5 நாட்களில் 800க்கும் அதிகமானோர் உடல்நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தென்கிழக்கில் சிஸ்தான், பலுசிஸ்தான் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என ஈரானியச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில் 100க்கும் அதிகமானோருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. மணல் புயலால் இதயத்திலும் கண்களிலும் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

மணல் புயலில் இருந்து பாதுகாத்துக்கொள்ள குடியிருப்பாளர்களுக்கு 6,000க்கும் அதிகமான முகக் கவசங்கள் வழங்கப்பட்டுள்ளன. வரும் நாட்களில் பலத்த காற்று வீசும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதனால் மணல் புயல் இன்னும் மோசமடையலாம்.

ஈரானில் வருடந்தோறும் மே மாத இறுதியிலிருந்து செப்டம்பர் மாதக் கடைசி வரை மோசமான மணல் புயல் வீசுவது வழக்கம்.

## செயற்பாட்டை நிறுத்தியது வெடித்த நீர்மூழ்கி நிறுவனம்



கடலுக்கு அடியில் கடந்த மாதம் வெடித்து ஐவர் கொல்லபட்ட டைட்டன் நீர்மூழ்கிக் கப்பலின் உரிமை நிறுவனமான ஓசியன்கேட் தனது செயற்பாடுகளை முழுமையாக இடைநிறுத்தியுள்ளது.

"அனைத்து ஆய்வு மற்றும் வணிக செயற்பாடுகளை" நிறுத்துவதாக அந்த நிறுவனம் தனது இணையத்தில் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. எனினும் அந்த நிறுவனம் தனது இணையதளத்தில் அசோஸ் மற்றும் பஹாமாஸின் போர்த்துக்கல் தீவுக் கூட்டங்களுக்கான சுற்றுலா பற்றிய விளம்பரத்தை வெளியிட்டுள்ளது.

டைட்டனிக் கப்பலின் சிதைவுகளை பார்வையிடச் சென்ற அந்த நீர்மூழ்கி கடந்த ஜூன் 18 ஆம் திகதி உட்புறமாக வெடித்தது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான விபத்துகளை தவிர்ப்பதற்காக விசாரணை முன்னெடுக்கப்படுவதாக அமெரிக்க கடலோர காவல் படை தெரிவித்துள்ளது.

## லெபனான் மீது இஸ்ரேல் படை பீரங்கி தாக்குதல்



லெபனானில் இருந்து டாங்கி எதிர்ப்பு ஏவுகணை ஒன்று வீசப்பட்டதை அடுத்து பதிலடியாக இஸ்ரேல் பீரங்கி தாக்குதலை நடத்தியுள்ளது.

ஏவுகணையின் சில பாகங்கள் லெபனானிலும் சில பாகங்கள் இஸ்ரேல் எல்லைக்கு அருகிலும் விழுந்ததாக இஸ்ரேல் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் லெபனானின் கிபார் சுபா மற்றும் ஹல்டா கிராமங்களுக்கு வெளியில் இஸ்ரேலின் 15க்கும் அதிகமான ஷெல் குண்டுகள் விழுந்ததாக லெபனான் அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மீதான ஏவுணை தாக்குதலுக்கு எந்தத் தரப்பும் இதுவரை பொறுப்புக் கூறவில்லை.

இரு தரப்பும் அமைதி காக்கும்படியும் மோதலை தீவிரப்படுத்தும் செயலை தவிர்க்கும்படியும் லெபனானில் உள்ள ஐ.நா அமைதிகாக்கும் படை கேட்டுக்கொண்டுள்ளது.

இஸ்ரேலை நோக்கி 30க்கும் அதிகமான ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதை அடுத்து கடந்த ஏப்ரலில் தெற்கு லெபனானில் பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸுடன் தொடர்புபட்ட போராளிகளை இலக்கு வைத்து இஸ்ரேல் வான் தாக்குதல்களை நடத்தியது.

2006இல் இஸ்ரேல் மற்றும் லெபனானின் ஹிபுல்லா படைகளுக்கு இடையிலான போருக்கு பின்னர் லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய மிகப் பெரிய தாக்குதலாக அது இருந்தது.

## புதிய த்ரீட்ஸ் செயலிக்கு எதிராக வழக்கு தொடுக்க ட்விட்டர் திட்டம்




ட்விட்டருக்கு போட்டியாக வெளியாகி வேகமாக வளர்ந்து வரும் த்ரீட்ஸ் செயலி தொடர்பில் அதன் தாய் நிறுவனமான மெடா மீது வழக்குத் தொடுப்பது குறித்து ட்விட்டர் ஆலோசித்து வருகிறது.

கடந்த புதன்கிழமை (05) வெளியிடப்பட்டது தொடக்கம் த்ரீட்ஸில் மில்லியன் கணக்கான பயனர்கள் இணைந்துள்ளனர். அந்த செயலி ட்விட்டரை ஒத்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

"போட்டி போடுவது நல்லதோ, ஆனால் ஏமாற்று வேலை சரியல்ல" என்று ட்விட்டர் உரிமையாளர் எலொன் மஸ்க் தெரிவித்துள்ளார். த்ரீட்ஸ் செயலியை உருவாக்குவதற்கு முன்னாள் ட்விட்டர் ஊழியர்கள் உதவியதாக அனுப்பப்பட்டிருக்கும் புகார் கடிதத்தை மெடா நிராகரித்துள்ளது.

அறிமுகமாகி இருக்கும் இந்த புதிய செயலியில் 30 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் இணைந்திருப்பதாக பேஸ்புக் தாய் நிறுவனமாகவும் உள்ள மெடா தெரிவித்துள்ளது.

ட்விட்டர் நிறுவனத்தின் அதிகாரபூர்வசட்டத்தரணிஅலெக்ஸ்ஸ்பிரோ புதன்கிழமை மெடா தலைமை நிர்வாக அதிகாரி மார்க் சக்கர்பேர்க்கிற்கு இது குறித்து கடிதம் அனுப்பி உள்ளார். அதில் ட்விட்டரின் வர்த்தக ரகசியங்கள் மற்றும் பிற அறிவுசார் சொத்துக்களை முறையான அனுமதி இன்றி வேண்டுமென்றே சட்டத்திற்குப் புறம்பாக தவறாகப் பயன்படுத்தியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

"மெடா டஜன் கணக்கான முன்னாள் ட்விட்டர் ஊழியர்களை பணியமர்த்தி எங்கள் செயலியை பிரதி எடுத்துள்ளது. ட்விட்டரின் வர்த்தக ரகசியங்கள் மற்றும் பிற ரகசியமான தகவல்களை மெடா நிறுவனத்திற்கு வழங்கி உள்ளனர். சிலர் ட்விட்டர் நிறுவனத்தில் இருக்கும் போதே இந்த தகவல்களை மெடா நிறுவனத்திற்கு வழங்கி, அதன் மூலம் ட்விட்டர் நிறுவனத்தை பிரதி எடுத்து த்ரீட்ஸ் செயலியை உருவாக்கி உள்ளனர்" என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்ஸ்டாகிராம் செயலியின் கிளை செயலியாக இந்த புதிய சமூக வலைத்தளமான த்ரீட்ஸ் செயல்படும்.

இன்ஸ்டாகிராமில் 2.35 பில்லியன் பயனர்கள் உள்ளனர். இந்த இன்ஸ்டாகிராம் பயனர்கள் மொத்தமாக அதன் கிளை செயலியாக உள்ள த்ரீட்ஸ் செயலிக்கு வந்தால் த்ரீட்ஸ் செயலி ட்விட்டரை ஒரே வாரத்தில் முந்திவிடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

த்ரீட்ஸ் வலைதளத்தில், பயனர்கள் தங்கள் உரை மற்றும் இணைப்புகளை பதிவிடலாம். மேலும் மற்றவர்களிடமிருந்து வரும் செய்திகளுக்கு பதிலும் அளிக்கலாம், மறுபதிவும் செய்யலாம். இந்த வசதிகள் ட்விட்டரில் இருப்பதை போன்றே பயனர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக்கின் ரீல்ஸ் எனப்படும் அம்சம், டிக்டொக் எனப்படும் மற்றொரு இணையதள செயலியின் வைரல் வீடியோ பயன்பாட்டை அப்படியே நகலெடுத்து உருவாக்கப்பட்டது.

மெடா நிறுவனத்திற்கு சொந்தமான இன்ஸ்டாகிராம் மற்றும் பேஸ்புக் ஆகிய இரண்டும் பிற உயர்தர அறிமுக இணைய போட்டியாளர்களின் தயாரிப்புகளை (ரீல்ஸ்) அப்படியே பிரதியெடுத்து தங்களுக்கு பயன்படுத்திக் கொண்டதாக ஏற்கனவே விமர்சனம் உள்ளது.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 8 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.37
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆனி 24
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



அரச தலைவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக இருந்த

# 'விசும்பாய' கட்டடம் உயர் ரக Boutique Hotelஆக மாற்றம்

## ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது

அரச தலைவர்கள் பலரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக இருந்த 'விசும்பாய' கட்டடம், உயர் ரக ஹோட்டலாக (Boutique Hotel) மாற்றப்படவுள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் Azotels Hospitality Limited ஆகிய நிறுவனத்துக்குமிடையில் நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் நேற்று (07) கைச்சாத்திடப்பட்டது.



இந்த உடன்படிக்கையில் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் நிமேஷ் ஹேரத் மற்றும் ஹொங்கொங் அசோடெல்ஸ் ஹொஸ்பிட்டலிட்டி லிமிடெட் (Azotels Hospitality Limited) நிறுவனத்தின் தலைவர் அட்ரியன் செச்சா (Adrian Zecha) ஆகியோர் கையெழுத்திட்டனர். விசும்பாய கட்டடம் 50 வருட குத்தகை அடிப்படையில் Azotels Hospitality Limited நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அசோடெல்ஸ் ஹொஸ்பிட்டலிட்டி லிமிடெட் ஹுனாஸ் ஹோல்டிங் பிரைவேட் லிமிடெட், ஜப்பானின் பார்ட்னர் சூட் (Consortium) உடன் இணைந்து இதை ஓர் உயர் ரக ஹோட்டலாக நடத்தும்.

06

பீச், சினமன் எயார் விமானசேவை நிறுவனங்கள் இணக்கம்

# இரத்மலானையிலிருந்து பலாலிக்கு தினமும் இரண்டு விமான சேவைகள்

## சபையில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

லோரன்ஸ் செல்வநாயகம்

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம்வரை இரண்டு உள்நாட்டு விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு பீச் எயார் மற்றும் சினமன் எயார் விமான சேவை நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக, துறைமுகங்கள் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன் மட்டக்களப்பு, திருகோணமலை, மத்தள, கட்டுநாயக்க உள்ளிட்ட விமான நிலையங்களிலிருந்து உள்நாட்டு விமான சேவைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விமான போக்குவரத்து திருத்தச் சட்டம் தொடர்பான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான உள்நாட்டு விமான சேவைகள் மூலம் நாட்டுக்கு வருகை தருகின்ற உல்லாசப் பிரயாணிகள், முதலீட்டாளர்கள் மற்றும் தேசிய ரீதியிலான வர்த்தகர்கள் சிறந்த பலன்களை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் மேலும் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், "கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி நிலையின் பின்னர், இலங்கைக்கான விமான சேவைகள் அதிகரித்துள்ளன. சைனா ஈஸ்டன் எயார் முன்னர் ஒரு வாரத்துக்கு ஒரு விமான சேவையையே நடத்தியது. அது தற்போது ஐந்தாக அதிகரித்துள்ளது.

அதேபோன்று, 14ஆக இருந்த எமிரேட்ஸ் எயார்லைன் விமான சேவைகள் 28ஆகவும் நான்காக இருந்த எத்தியான் விமான சேவைகள் ஆறாகவும் அதிகரித்துள்ளன.

அத்துடன், 21ஆக இருந்த கட்டார் விமான சேவைகள் தற்போது 35 ஆக அதிகரித்துள்ளன. எயார் அரேபியா ஏழு விமான சேவைகளை தற்போது 11ஆக அதிகரித்துள்ளது. எயார் ஏசியா ஏழு சேவைகளை தற்போது பதினொன்றாக அதிகரித்துள்ளது. அதேபோன்று, ஏயர் இந்தியா 16 சேவைகளை தற்போது 17ஆக அதிகரித்துள்ளது. அவை தவிர மேலும் பல விமான சேவை நிறுவனங்கள் இலங்கைக்கான விமான சேவைகளை ஆரம்பித்துள்ளன. அந்த வகையில், இது ஒரு சிறந்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

நான், இண்டிகோ உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன். அதன் மூலம் யாழ்ப்பாணத்துக்கான விமான சேவைகளை மேலும் அதிகரிக்க முடியும் எனத் தெரிவித்தார்.





தனது சேவைக்காலம் நிறைவடைந்து நாடு திரும்பவுள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கர்னல் முஹம்மட் சப்தர் கான்சியா, பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரட்ணவை மரியாதை நிமித்தம் நேற்று முன்தினம் (06) சந்தித்த போது பிடிக்கப்பட்ட படம்.

# மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் நியமனம்; அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும்

## வேலுகுமார் எம்.பி. சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் நியமனம் மற்றும் நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம் தொடர்பாக அரசாங்கம் உரிய கவனம் செலுத்தி சிறந்த தீர்வை பெற்றுத்தர வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார் தெரிவித்தார்.

மலையக இளைஞர்களின் எதிர்காலம் கல்வியில் தங்கியுள்ளதால், கல்வித்துறையில் ஊழலை திணிக்கக்கூடாதெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர், "காலத்துக்கு பொருத்தமான வகையில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல துறைகளிலும் ஊழல் மோசடி காணப்படுகின்றது. பிறப்பு முதல் இறப்புவரை சகல நடவடிக்கைகளிலும் ஊழல் காணப்படுகிறது. இலவசக் கல்வி மற்றும் மருத்துவத்துறையிலும் ஊழல் வேரூன்றியுள்ளது. அந்த வகையில், இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியமும் இதனை வலியுறுத்தியுள்ளது.

அதேபோன்று, ஊழல்களில் ஈடுபட்டோர் தண்டிக்கப்பட வேண்டுமென்று சர்வதேச நிறுவனங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. அதற்கிணங்க, இயற்றப்படும் சட்டம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

மத்திய மாகாணத்தின் கல்வித்துறை கடந்த காலங்களில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தது. அதில் அரசியல் கட்சிகளின் அழுத்தங்கள் காணப்பட்டன.

அத்துடன், மத்திய மாகாணத்தில் அதிகமான தோட்டப் பாடசாலைகள் காணப்படுகின்றன. தோட்டப் பாடசாலைகளின் நலன் தொடர்பாக ஆராய மத்திய மாகாணத்தில் மேலதிக கல்விப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். ஏற்கெனவே அவ்வாறான ஒரு பதவி காணப்பட்டது. ஆனால், தற்போது அந்தப் பதவி இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் அது தொடர்பாக உரிய கவனம் செலுத்த வேண்டும். மத்திய மாகாணத்தில் மேலதிக கல்விப் பணிப்பாளர்களாக பதவி வகித்தவர்கள், அரசியல் கட்சிகளின் கைக்கூலிகளாகவே செயற்பட்டுள்ளார்கள். அதன் காரணமாகவே தற்போது அந்தப் பதவி முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹட்டன் கல்வி வலயத்திலுள்ள 133 பாடசாலைகளில் 115 பாடசாலைகள் தமிழ்மொழி மூலமானவை. அதேவேளை, நுவரெலியா கல்வி வலயத்திலுள்ள 158 பாடசாலைகளில் 123 பாடசாலைகள் தமிழ்மொழி மூலமானவை. ஹட்டன் கல்வி வலயத்துக்குரிய பணிப்பாளர் தொடர்ச்சியாக மலையக சமூகத்திலிருந்து உரிய கல்வித் தகைமையுடன் நியமிக்கப்பட்டு வந்துள்ளார் என்றார்.

# மூத்த பத்திரிகையாளர் தனபாலசிங்கத்தின் தந்தை காலமானார்



மூத்த பத்திரிகையாளர் தனபாலசிங்கத்தின் தந்தை, ஓய்வுபெற்ற தபால் திணைக்கள அலுவலகர் ஆழ்வார் வீரகத்தி (வயது 91) நேற்று வெள்ளிக்கிழமை காலமானார்.

இறுதிக்கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (10) முற்பகல் 10.00 மணியளவில் அவரின் சொந்த ஊரான வடமராட்சி கரவெட்டியில் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில்

# போலி நாணயத்தாள்களுடன் இளைஞர்கள் இருவர் கைது

மன்னார் குறூப் நிருபர்

ஒருதொகை போலி நாணயத்தாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்கள் நேற்று முன்தினம் (06) மாலை மன்னார் வைத்தியசாலை பிரதான வீதியில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து போலி நாணயத்தாள்களும் மீட்கப்பட்டுள்ளன.

இவர்களிடமிருந்து 500 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 15 உம், 1,000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 12 உம், 5,000 ரூபாய் போலி நாணயத்தாள்கள் 09 உம் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இவர்களிடம் இருந்து 64 ஆயிரத்து 500 ரூபாய் பெறுமதியான போலி நாணயத்தாள்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.




மன்னாரைச் சேர்ந்த இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், கைப்பற்றப்பட்ட போலி நாணயத்தாள்களுடன் சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சந்தேக நபர்களிடம் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# குருந்தூர் மலையிலிருந்து எம்மை வெளியேற்றும் அதிகாரம் கிடையாது

## சபையில் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர

லோரன்ஸ் செல்வநாயகம்



குருந்தூர்மலையிலிருந்து தம்மை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு என்பதை அவர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் வீரசேகர தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராக அங்குள்ள நீதிபதிகளும் செயற்படுகிறார்கள் எனத் தெரிவித்த அவர், பௌத்த மரபுரிமைகளை பாதுகாக்க சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும் தெரிவித்தார். அதேபோன்று, தொல்பொருள்தொடர்பாக ஆராயும்அதிகாரம்அங்குள்ள நீதிபதிக்கு கிடையாது என்றும் தொல்பொருள் அதிகாரிகளே அதனை மேற்கொள்வர் என்றும், அவர் சபையில் தெரிவித்தார்.

அந்த வகையில், பௌத்த மரபுரிமைகளை பாதுகாப்பதற்கு சிங்கள மக்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விமானப் போக்குவரத்து தொடர்பான திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர், "தேசிய நல்லிணக்கத்துக்கும் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயற்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன. இலங்கை சிங்கள பௌத்த நாடு. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 2,000 வருடகால பழமையான தொல்பொருள் மரபுரிமைகள் பரவலாக காணப்படுகின்றன. அந்த வகையில், குருந்தூர்மலையில் பௌத்த மரபுரிமைகள் உள்ளன. குருந்தூர்மலைக்கு நாம் அண்மையில் சென்றிருந்த போது, அவ்விடத்துக்கு வருகை தந்திருந்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி, நாம் இடம்பெற்று வருகின்ற விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதாக குறிப்பிட்டு எம்மை அங்கிருந்து வெளியேறிச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

அத்துடன், குருந்தூர் விகாரையில் வழிபாட்டில் ஈடுபட வருகை தந்த பௌத்த தேரரையும் வெளியேறுமாறு குறிப்பிட்டார். எந்த வகையிலும் நீதிபதியின் இதுபோன்ற செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. குருந்தூர்மலை விகாரையின் தொல்பொருள் மரபுரிமை தொடர்பாக கேள்வி எழுப்பும் அதிகாரமோ, அத்துடன் குருந்தூர்மலையிலிருந்து வெளியேறுமாறு குறிப்பிடும் அதிகாரமோ அவருக்கு கிடையாது என்றார்.

அமரகீர்த்தி அத்துக்கோரள கொலை;

# சந்தேகநபர்கள் 32 பேரது விளக்கமறியல் நீடிப்பு



பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் கொலை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 32 சந்தேக நபர்களினதும் விளக்கமறியல் நீதிமன்றத்தால் நேற்று நீடிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், சந்தேக நபர்கள் 32 பேரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, கம்பஹா மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சந்தேக நபர்கள், கம்பஹா மேல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து, இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக

# சிங்கப்பூரிலுள்ள சட்டத்தை இங்கு நடைமுறைப்படுத்த வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு இணங்க போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றாக ஒழிக்க முடியாது என்பதுடன், அதனால் சிங்கப்பூரில் நடைமுறைப்படுத்தும் சட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதேவேளை, போதைப்பொருள் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படும் போதைப்பொருள் வர்த்தகர்களை சிறைச்சாலைகளில் வைத்து பொதுமக்களின் வரிப்பணத்தில் பராமரிக்கப்படுவது முறையற்றது எனவும், அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய போதே, எதிர்க்கட்சி தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"போதைப்பொருள் வர்த்தகம் நாட்டுக்குள் பாரியளவில் அதிகரித்துள்ளது. பாடசாலைக் கட்டமைப்பிலும் இது இடம்பெறுகிறது. அதனால், விசேட வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு போதைப்பொருள் வர்த்தகத்தை முற்றாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போதைப்பொருள் காரணமாக தற்போது நாட்டுக்குள் படுகொலைகள் அதிகரித்துள்ளன. நுளம்புகளை கொல்வதைப் போன்று மனிதர்கள் கொலை செய்யப்படுகின்றனர். இது பாரிய சிக்கலாகும்.

மேலும், போதைப்பாருள் வர்த்தகர்கள் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதும், நாட்டு மக்களின் வரிப்பணத்திலேயே அவர்கள் சிறைச்சாலைகளில் பராமரிக்கப்படுகின்றனர்.

அத்துடன், போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு எதிராக ஏன் சிங்கப்பூரில் நடைமுறையிலுள்ள சட்டத்தை கொண்டு வர முடியாது? எனவே, போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருபவர்கள், மக்களின் வரிப்பணத்தில் சிறைச்சாலைகளில் பராமரிக்கப்படுவது தொடர்பாக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் சிந்திக்க வேண்டும் எனவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# உலகின் மிகவும் ஆபத்தான பறவை இலங்கையில்!

## பொதுமக்கள் பார்வையிட சந்தர்ப்பம்



'உலகின் மிகவும் ஆபத்தான பறவை' என்று பெயரிடப்பட்டுள்ள காசோவரி (Cassowary) பறவைகள், தாய்லாந்திலிருந்து எமது நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதை தொடர்ந்து, இன்னும் ஒரு மாதத்தின் பின்னர் அந்தப் பறவைகளை பொதுமக்கள் பார்வையிட சந்தர்ப்பம் வழங்கப்படுமென, தெஹிவளை மிருகக்காட்சிசாலை தெரிவித்தது.

இந்தப் பறவைகள், மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து MH 179 மலேசியன் எயார்லைன்ஸ் விமானத்தில் கடந்த 5ஆம் திகதி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையமூடாக எமது நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

உலகின் இரண்டாவது பெரிய மற்றும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய பறவைக் கூட்டத்தில், 9 மாதங்களேயான ஆண் காசோவரி பறவையொன்றும் இரண்டு பெண் காசோவரி பறவைகளும் உள்ளதாக, தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையின் பிரதிப் பணிப்பாளர் தினுசிக்கா மானவடு தெரிவித்தார்.

தற்போது பறவைகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.29 | 215.00 |
| கனடியன் டொலர் | 224.47 | 239.42 |
| யூரோ | 324.45 | 344.53 |
| ஜப்பான் யென் | 2.1010 | 2.2276 |
| சிங்கப்பூர் டொலர் | 220.86 | 235.11 |
| ஸ்டேர்லிங் பவுன் | 379.69 | 402.23 |
| சுவிஸ் பிராங்க் | 329.51 | 352.41 |
| அமெரிக்க டொலர் | 298.47 | 314.49 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 811.99 | கட்டார் ரியால் | 84.04 |
| குவைத் டினார் | 996.76 | சவூதி ரியால் | 81.61 |
| ஓமான் ரியால் | 795.16 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.34 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834

தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 24ஆம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 19

### குறள் தரும் சிந்தனை



அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு

அறிவுப் பஞ்சம்தான் மிகக் கொடுமையான பஞ்சமாகும். மற்ற பஞ்சங்களைக்கூட உலகம் அவ்வளவாகப் பொருட்படுத்தாது.

# பொருளாதார மீட்சியின் பலனை மக்கள் அனுபவிக்க வேண்டும்!

நாட்டில் கடந்த வருடம் நிலவிய மிக மோசமான பொருளாதார நெருக்கடியின் விளைவாக மக்களின் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்திருந்தன. பொருளாதார நெருக்கடி நாட்டில் தற்போது பெருமளவில் குறைந்திருப்பதனால், அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் மீண்டும் குறைக்கப்படுவது எப்போது என்பதுதான் மக்களின் ஏக்கமாக இருக்கின்றது.

கடந்த வருடத்தின் ஆரம்பத்தில் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளத் தொடங்கியது. அந்நிய செலாவணிப் பற்றாக்குறையோடு ஆரம்பமான இந் நெருக்கடியினால் அனைத்துத்தரப்பு மக்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டனர். மக்களின் அத்தியாவசியப் பாவனைப் பொருட்கள் விலையுயர்ந்தமை ஒருபுறமிருக்க சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், டீசல், பெற்றோல் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களையும் பெற்றுக் கொள்வதில் மக்கள் கடும் அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர்.

எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் நிலைமைக்கு உள்ளாகினர். இதன் விளைவாக வேளாவேளைக்கு உணவை சமைத்துக் கொள்வதற்குக்கூட மக்களால் முடியாமல் போனது. குறிப்பாக நகர்ப்புற மக்களையே சமையல் எரிவாயு பற்றாக்குறை பெரிதும் பாதித்திருந்தது.

அன்றைய நிலைமை மிகவும் பயங்கரமானதாகவே இருந்தது. எங்கு நோக்கினாலும் மக்களின் கியூவரிசைகளையே அக்காலத்தில் காண முடிந்தது. பொருட்களின் விலையேற்றங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாதவையாக இருந்தன. இந்த விலையேற்றங்கள் எதிர்காலத்தில் பழையபடி குறைவடையமாட்டாதா என்று மக்கள் பெரிதும் ஏங்கினர். நாட்டுக்கு சிறந்த தலைமைத்துவம் ஏற்பட வேண்டுமென்றும், பொருளாதார நெருக்கடி முடிவுக்கு வர வேண்டுமென்றும் அன்று ஏங்காத மக்கள் இல்லை.

இவ்வாறான நெருக்கடி நிறைந்ததொரு சூழலில், 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தின் பிற்பகுதியில் நாட்டின் தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றார். நாடும் மக்களும் பொருளாதார ரீதியில் இக்கட்டான நிலைக்கு உள்ளாகி இருந்த சூழலில் இப்பதவியை ஏற்ற ஜனாதிபதி, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு முன்னுரிமை அளித்து வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்டங்கள் குறுகிய காலம் முதல் பிரதிபலன்களை அளிக்கத் தொடங்கின. இதன் பயனாக எரிவாயு மற்றும் எரிபொருட்களுக்காக நாட்கணக்கில் காத்திருக்கும் நிலை கட்டம் கட்டமாக முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இப்போது அவற்றுக்கு எவ்வித தட்டுப்பாடும் இல்லாத இயல்பு நிலை ஏற்பட்டிருக்கிறது.

பொருட்கள் பலவற்றின் விலைகள் தற்போது குறிப்பிடும்படியாகக் குறைவடைந்துள்ளன. ஆனால் மேலும் பல பொருட்களுக்கு இன்னுமே விலைகள் குறைக்கப்படவில்லை. அப்பொருட்களுக்கு விலைகள் குறைக்கப்படுவது மிகவும் அவசியம். அப்போதுதான் பொருளாதார நெருக்கடி தளர்ந்துள்ளதன் பலாபலன்களை மக்கள் அனுபவிக்க வழியேற்படும்.

கோதுமைமாவின் விலை குறைவடைந்துள்ள போதிலும், பாண் உட்பட கோதுமைமாவில் தயாராகின்ற உணவுப்பண்டங்களின் விலைகள் உரியபடி இன்னுமே குறைக்கப்படவில்லை. நியாயமாக நோக்கினால் கோதுமைமாப் பண்டங்களின் விலைகள் இன்னும் அதிகம் குறைக்கப்பட வேண்டியது அவசியம். ஆனால் பேக்கரி உரிமையாளர்கள் அவ்வாறான விலைக்குறைப்புக்கு முன்வருவதாக இல்லை. இதற்கு அதிகமாக விலைக்குறைப்பு செய்வதற்கு தங்களால் முடியாதென்பதுதான் அவர்களது நிலைப்பாடாக இருக்கின்றது.

சமையல் எரிவாயுவின் விலை நன்றாகவே குறைக்கப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணமும் ஜுலை மாதம் முதலாம் திகதியில் இருந்து குறிப்பிடும்படியாக குறைக்கப்பட்டுள்ளது. மக்களைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கு உதவும் வகையிலேயே இவ்வாறான விலைக்குறைப்புகளை அரசாங்கம் அவசரமாக மேற்கொண்டு வருகின்றது. ஆனாலும் உணவுப்பண்டங்களின் விலைகளைக் குறைப்பதற்கு வியாபார சமூகத்தினர் இன்னுமே முன்வராமல் இருப்பதுதான் சிக்கலுக்குரிய விடயமாகும்.

ஹோட்டல்களில் உணவுகளின் விலைகள் இன்னும் நியாயமான முறையில் குறைக்கப்படவில்லையென்று மக்கள் குறை கூறுகின்றனர். பொருளாதார நெருக்கடி வேளையில் உணவுகளின் விலைகளை வியாபாரிகள் அதிகரித்துக் கொண்டனர். ஆனால் பொருளாதார நெருக்கடி பெருமளவில் தணிந்துள்ள இவ்வேளையில், அவற்றின் விலைகளைக் குறைப்பதற்கு வியாபாரிகள் இன்னுமே முன்வராமலிருப்பது நியாயமல்ல என்கிறார்கள் பொதுமக்கள்.

புறக்கோட்டை மொத்தவியாபாரிகளின் கையில்தான் விலைக்குறைப்பு உள்ளதென்று ஊடகங்களில் அடிக்கடி செய்திகள் வெளிவருகின்றன. உணவுப் பொருட்களின் விலைகளை புறக்கோட்டை வர்த்தகர்கள் குறைத்தாலேயே தாங்களும் விலைகளைக் குறைக்க முடியுமென சில்லறை வர்த்தகர்கள் கூறுகின்றனர். இக்கூற்றில் உள்ள உண்மை கண்டறியப்பட்டு, பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம். அப்போதுதான் பொருளாதா மீட்சியின் பலன்களை மக்கள் அனுபவிக்கக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# ராகுல் காந்திக்கு இருவருட சிறைத்தண்டனை உறுதி!

## உயர்நீதிமன்றமும் நேற்று கைவிரித்து விட்டதால், அடுத்தகட்டமாக உச்சநீதிமன்றத்தை நாடப் போகிறார் ராகுல்! சிறைவாசத்திலிருந்து தப்புவதற்கு அவருக்கு இனிமேல் உள்ளது ஒரேயொரு வாய்ப்பு மட்டுமே!



அவதூறு வழக்கில் இந்தியாவின் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தமக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டு சிறைத்தண்டனைக்கு எதிராக தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை குஜராத் உயர்நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது. செய்தது. அத்துடன் ராகுல் காந்தியின் 2 ஆண்டு சிறைத்தண்டனையை நிறுத்தி வைப்பதற்கு குஜராத் உயர் நீதிமன்றம் மறுத்துவிட்டது.

2019 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலம் கோலாரில் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய ராகுல் காந்தி, "நாட்டை விட்டுத் தப்பி ஓடுகிற மோசடி பேர்வழிகள் மோடி என்ற பெயர் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்" என்றார்.

இது மோடி சமூகத்தை இழிவுபடுத்துவதாகக் கூறி குஜராத் மாநிலம் சூரத் நீதிமன்றத்தில் ராகுல் காந்திக்கு எதிராக அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு ஆண்டுகளாக நிலுவையில் இருந்த இந்த வழக்கை குஜராத்தின் சூரத் நீதிமன்றம், திடீரென கடந்த மார்ச் 23 ஆம் திகதி விசாரித்து ராகுல் காந்திக்கு 2 ஆண்டு சிறைத்தண்டனை விதித்தது. இது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் ராகுல் காந்தி மேன்முறையீடு செய்வதற்காக சிறைத்தண்டனையை இடைநிறுத்தி வைத்தது சூரத் நீதிமன்றம்.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி 2 ஆண்டு சிறைத்தண்டனை பெற்றால் அவரது பதவி பறிபோகும். இதனடிப்படையில் ராகுல் காந்தியின் லோக்சபா எம்.பி. பதவி உடனடியாக பறிக்கப்பட்டது. அவர் வெற்றி பெற்ற கேரளாவின் வயநாடு லோக்சபா தொகுதி வெற்றிடமானதாகவும் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஏப்ரல் 3 ஆம் திகதி சூரத் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 2 ஆண்டு சிறைத்தண்டனைக்கு தடை கோரி ராகுல் காந்தி மேன்முறையீட்டு மனுத் தாக்கல் செய்தார். ராகுல் காந்தியின் மேன்முறையீட்டு மனுவை ஏப்ரல் 13 ஆம் திகதி விசாரித்த சூரத் மாவட்ட அமர்வு நீதிமன்றம் ஏப்ரல் 20 இல் தீர்ப்பு வழங்குவதாக அறிவித்தது. ஏப்ரல் 20 ஆம் திகதி 2 ஆண்டு சிறைத்தண்டனைக்கு தடை கோரிய ராகுல் காந்தியின் மேன்முறையீட்டு மனுவை சூரத் மாவட்ட அமர்வு நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதற்கு எதிராக குஜராத் உயர்நீதிமன்றத்தில் ராகுல் காந்தி மற்றொரு மேன்முறையீடு மனுவைத் தாக்கல் செய்தார். இது தொடர்பாக ஏப்ரல் மாதம் இறுதியில் நடைபெற்ற விசாரணையின் போது ராகுல் காந்தி மீதான குற்றச்சாட்டுகளுக்கு உரிய ஆதாரங்கள் தரப்படவில்லை என அவரது வழக்கறிஞர் அபிஷேக்சிங்வி வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து இவ்வழக்கு மே 2 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

குஜராத் உயர்நீதிமன்றத்தில் மே 2 ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின் போது, ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட தண்டனைக்கு இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்க வேண்டும். ராகுல் காந்தி வென்ற வயநாடு தொகுதிக்கு 3 மாதங்களில் தேர்தல் ஆணையம் இடைத்தேர்தலை அறிவிக்கக் கூடும். அதை ராகுல் காந்தியால் தடுத்து நிறுத்த முடியாது என்பதால் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என அவரது தரப்பில் வாதிடப்பட்டது.

ஆனால் இதனை ஏற்க மறுத்த குஜராத் உயர்நீதிமன்றம், ராகுல் காந்தியின் மேன்முறையீட்டு மனு மீது இடைக்கால உத்தரவு எதுவும் பிறப்பிக்க முடியாது. மே 4 ஆம் திகதி கோடை விடுமுறை தொடங்குகிறது. இந்த கோடை விடுமுறைக்குப் பின்னர் ராகுல் காந்தி மேல்முறையீட்டு வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என தெரிவித்தது.

இந்த நிலையில் ராகுல் காந்தி மேன்முறையீட்டு வழக்கில் நேற்று முற்பகல் 11 மணிக்கு இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டது. ராகுல் காந்தியின் மேன்முறையீட்டு மனுவை குஜராத் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. 2 ஆண்டு சிறை தண்டனையை நிறுத்த கோரும் கோரிக்கையையும் குஜராத் உயர்நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

இதனையடுத்து ராகுல் காந்தி உச்சநீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்ய உள்ளார். தற்போதைய நிலையில் ராகுல் காந்தியால் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரிலும் பங்கேற்க முடியாது.

# சிந்தையில் வாழும் சிவன்



பத்திரிகைத் துறையினிலே மூவ ரோர்கால்
பவனிவந்தார் சிவன்நாமங் கொண்ட பேர்கள்
வித்தகராம் எஸ்.டிசிவ நாய கம்போல்
வல்லசிவ குருநாதன் நேசச் செல்வன்
முத்தமிழில் மூவருமே திறமை கொண்டோர்
மும்மூர்த்தி கள்ளெழுத்தின் ஊட கத்தில்
சிந்தித்தால் இன்றவர்போல் யாரு மில்லை
தோன்றுவரோ தோன்றாரோ தெரிகி லோமே!

தினகரனின் ஆசிரியர் தலைமைப் பீடம்
சிறப்புற்றே இருந்ததவர் காலந் தன்னில்
மனமொன்றிப் பற்பலரைத் தோற்று வித்தார்
மிகையில்லை இலக்கியத்தின் பால தாகும்
இனமதமென் றில்லையவர் எல்லோ ருக்கும்
இடமளித்தார் வளரவென எல்லை யற்றே
தினகரனால் துறைசார்ந்தோர் பலரு யர்ந்தார்
தொடருகின்றா ரவர்பணியைச் சிறப்பாய் இன்றே

கொழும்புத்தமிழ்ச் சங்கத்தின் தலைவ ராகக்
கடன்செய்தார் நெடுநாட்கள் நானு முற்றேன்
பழம்பெருமை கொண்டதது நம்முன் னோர்கள்
பாதுகாத்து வளர்த்தெடுத்த பெரிதாம் சொத்து
வழிநடத்திச் சென்றாரதை வரலா றொன்றை
விட்டகன்றார் வாழுகின்றார் சரித்தி ரத்தில்



அழியாத பெயரவர்கும் உண்டா மாங்கே
அவர்காலம் பொற்காலம் அறியா ருண்டோ

நீதித்துறைக் கல்விவல்லார் மாண வர்க்கு
நல்லாசான் கல்லூரிப் போத னையும்
போதித்தார் நெடுங்காலம் ஊட கத்துப்
போதனையும் தொடர்தியற்றிப் பலபேர் கற்றுச்
சாதனைகள் செய்தார்கள் சாதிக் கின்றார்
திருசிவகுரு நாதரையா தயவி னாலே
ஏதுவானார் அரசாங்க கௌர வத்தை
உவந்ததளிக்க 'இலக்கியதில் செம்மல்' என்றே

நான்சார்ந்த முஸ்லிம்கள் அன்னார் மீது
நிறைந்தமரி யாதையொடு கௌளர வத்தை
நீண்டநெடுங் காலமதாய்க் கொண்டி ருந்தார்
நன்றியுடன் இருந்தார்கள் இறுதி மட்டும்
தோன்றாத துணையாக நின்று அன்னார்
செய்தபெருந் தொண்டினுக்காய் இலக்கி யத்தில்
சான்றாக இன்னும்பலர் வாழு கின்றார்
திருசிவகுரு நாதரையா நெஞ்சில் வாழ்வார்

ஜின்னாஹ்
ஷரிபுத்தீன்...

# அக்கரைப்பற்றில் ஆரம்பப்பிரிவு கல்வி வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருந்து பணியாற்றியவர் மன்சூர்

## ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகருக்கு பாராட்டு





அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனையில் 1964.04.21 இல் பிறந்து கல்வித்துறையில் பணியாற்றி விட்டு தனது 59 ஆவது வயதில் அண்மையில் கல்விச் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ள பன்னூலாசிரியர், எழுத்தாளர், சிரேஷ்ட ஊடகவியலாளர், ஆசிரிய ஆலோசகர், நூல் விமர்சகர், பத்திரிகை எழுத்தாளர் என்று பல்மட்ட சாதனைகளை படைத்தவர் அட்டாளைச்சேனை எஸ்.எல். மன்சூர்.

தனது ஆரம்பக் கல்வியினை அட்டாளைச்சேனை அல்முனீறா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியினை அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியிலும் கற்ற இவர், 1988 இல் ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்று ஒலுவில், அட்டாளைச்சேனையின் பல பாடசாலைகளில் கற்பித்து ஆசிரியராகவும், பிரதியதிபராகவும், 2011ஆம் ஆண்டு முதல் கல்விப் பணிக்கு ஓய்வுக்கு செல்லும் வரை அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிமனையின் ஆரம்ப பிரிவு ஆசிரிய ஆலோசகராகவும் முத்திரை பதித்தவராவார்.

2006 இல் கல்விப் புலத்தில் BEd கல்விமாணி பட்டத்தை பெற்று தனது திட்டங்களை பாடசாலைகளில் அறிமுகப்படுத்தி சிறந்த பாராட்டைப் பெற்றுக் கொண்டார். வெறுமனே கல்விப்பணி என்று மாத்திரம் காலம் கழித்துவிடாது தரம் 15 வரை சுமார் 30 புத்தகங்களை வெளியிட்டு பிஞ்சு உள்ளங்களில் மிஞ்சி நின்றார்.

இவர், பத்திரிகைகளுக்கு கல்வி மற்றும் சமூகம்சார் ஆக்கங்களை எழுதி உள்ளார். அத்தோடு கல்வி, சமூகம், உளவியல், முன்பள்ளி நூல்கள், மற்றும் சிறுகதை நூல்கள் உட்படு 13 நூல்களை வெளியீடு செய்துள்ளார்.

எல்லோருடனும் அறிவியல்சார் கலந்துரையாடல்கள் செய்வது இவருக்கு கைவந்த கலை. ஓய்வுக்குப் பின்னரான காலத்திலும் கூட கற்கின்ற மாணவர்களுக்கு உதவிக்கொண்டிருக்கின்றார்.

எம்.எஸ்.எம்.றிஸ்வான்...
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# புதிய இடத்திற்கு மாற்றப்பட்ட நிந்தவூர் பொலிஸ் நிலையம்

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் இடமாற்றப்பட்ட புதிய பொலிஸ் நிலையம் கடந்த புதன்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 2021.11.29ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டிருந்த நிந்தவூர் பொலிஸ் நிலையம் தற்போது கல்முனை_ அக்கரைப்பற்று பிரதான வீதி அமைந்துள்ள புதிய இடத்திற்கு மாற்றப்பட்டு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம் .நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய பொலிஸ் நிலையத்தை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர். எம். டி .ஜெயந்த ரத்னாயக்க, கல்முனை





உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக, நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எம்.அப்துல் லத்தீப், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபா, நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம் றயீஸ் மற்றும் சர்வமத தலைவர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் இதன் போது அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயசிறி குறித்த பொலிஸ் நிலையத்தினை இணைத்து அமைக்கப்பட்ட டென்னிஸ் விளையாட்டு கூடத்தை பார்வையிட்டதுடன் டென்னிஸ் விளையாட்டிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் பொலிஸ் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பி.எம்.எம்.ஏ.காதர்...
(மருதமுனை தினகரன் நிருபர்)

# நெதர்லாந்திலிருந்து மீண்டும் வந்துசேர்ந்த இலங்கையின் ஆறு புராதனப் பொருட்கள்

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் நெதர்லாந்திற்கு கொண்டு செல்லப்பட்ட கண்டி இராஜதானிக் காலத்திற்குரிய 6 புராதனப் பொருட்கள் மீண்டும் தாய்நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவுபெற்ற உள்நாட்டு வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் நெதர்லாந்தின் Rijks அருங்காட்சியகத்தில் உள்ள புராதனப் பொருட்களில் ஆறு பொருட்கள் இலங்கைக்குச் சொந்தமான பொருட்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது Rijks அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தங்கத்தினாலான உறையுடனான உடைவாளொன்று, வெள்ளியினாலான உடைவாளொன்று, தங்கத்தினாலான கத்தியொன்று, பெரிய இரண்டு துப்பாக்கிகள் மற்றும் லெவ்கே திஸாவிற்கு சொந்தமானவை என்று கருதப்படும் பீரங்கியொன்று ஆகிய ஆறு புராதனப் பொருட்களும் கண்டி இராஜதானிக் காலத்திற்குரியவை என்று உறுதிப்படுத்தப்பட்டன.

இவை 1765 இல் ஒல்லாந்தர்களால் கண்டி அரச மாளிகை கைப்பற்றப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்திய வர்த்தக நிறுவனத்தினால் (VOC) கொண்டு செல்லப்பட்டவை எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆய்வின் மூலம் செய்யப்பட்ட உறுதிப்படுத்தலின் அடிப்படையில் இப்புராதனப் பொருட்கள்



## அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் முயற்சியினால் கிடைத்த பலன்!

ஆறினையும் மீண்டும் இலங்கையிடம் ஒப்படைக்கும்படி இராஜதந்திர ரீதியிலான கோரிக்கையொன்று புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அவர்களினால், நெதர்லாந்தின் கல்வி, கலாசார மற்றும் விஞ்ஞான அலுவல்கள் தொடர்பான அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

நெதர்லாந்து அரசாங்கத்தினால் காலனித்துவ நாடுகளுக்குச் சொந்தமான புராதனப் பொருட்களை மீண்டும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற கொள்கை ரீதியிலான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதன் பொருட்டு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் முகமாக காலணித்துவ நாடுகளுக்கரிய புராதனப் பொருட்களை மீளக்கையளித்தல் தொடர்பில் சுயாதீன குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது விண்ணப்பம் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பமாகும். அக்குழுவானது இவ்விண்ணப்பம் தொடர்பில் ஆராய்ந்து குறித்த ஆறு புராதனப் பொருட்களையும் உத்தியோகபூர்வமாக மீண்டும் இலங்கையிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற சிபாரிசினை நெதர்லாந்து அரசாங்கத்திற்கு வழங்கியிருந்தது. இது தொடர்பாக நெதர்லாந்து அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் 2023 ஜுலை மாதம் 06 ஆம் திகதி வர்த்தமானியின் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இத்தகைய புராதனப் பொருட்களை மீளக்கையளித்தல் தொடர்பான பணிகளை இலகுவாக்குவதன் பொருட்டு இலங்கை சார்பிலான ஆலோசனைக் குழுவொன்று தற்போது அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சனூஜா கஸ்தூரி ஆரச்சி கூறியதாவது:

இது இலங்கையைப் போன்று நெதர்லாந்து நாட்டிற்கும் வரலாற்று ரீதியாக மிகவும் விசேடமானதொரு சந்தர்ப்பமாகும். பாரிய அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வுகளின் காரணமாக பல நூற்றாண்டுகளாக இப்புராதனப் பொருட்கள் தொடர்பில் நிலவிய தவறான கருத்துக்களை இல்லாமல் செய்ய முடிந்தது. புராதன இலங்கையின் சிற்பக்கலைத்துறையின் சிறப்பினை எடுத்தியம்பும் இப்புராதனப் பொருட்கள் அபிமானத்தை மீண்டும் வெளிப்படுத்துவதுடன் தாய்நாட்டிற்கு எடுத்துவரப்படுவதானது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

"நெதர்லாந்து அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட காலனித்துவ நாடுகளுக்கு சொந்தமான புராதனப் பொருட்களை மீளக்கையளித்தல் தொடர்பிலான முன்மாதிரி ஆய்வுக் கருத்திட்டத்தின் (PPROCE) கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வானது வெளிநாடுகளில் உள்ள இலங்கைக்குச் சொந்தமான புராதனப் பொருட்கள் தொடர்பிலான ஆய்வுகளின் முக்கிய திருப்புமுனையாகும். 1970 இல் அப்போதைய கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தின் பணிப்பாளர் பீ. எச். டீ.எச். சில்வா அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் பின்னர் அத்தகைய ஆய்வுகள் மிகவும் குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த ஆய்வுக்குழுவில் இலங்கை மற்றும் நெதர்லாந்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் உள்ளடங்கியிருந்தனர். தேசிய அருங்காட்சியகத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (கலாசாரம்) செனரத் விக்ரமசிங்க, துப்பாக்கிகள் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற சாமிகர பிலபிட்டிய, களனி பல்கலைக்கழக பேராசிரியர் அசோக்க சில்வா மற்றும் கலாநிதி கங்கா திஸநாயக்க ஆகிய நிபுணர்கள் இலங்கை ஆய்வுக்குழுவில் உள்ளடங்கியிருந்தனர். இதன்போது மிகவும் முக்கியமான ஆவணங்களை பெற்றுத்தந்து தேசிய சுவடிக்கூடத் திணைக்களமும் விசேட ஒத்துழைப்பினை வழங்கியிருந்தது.


பீரங்கி


பெரிய துப்பாக்கி

இப்புராதனப் பொருட்களுக்குரிய ஆவணங்கள், ஒல்லாந்த அறிக்கைகள் மற்றும் கலைஞர்களின் திறமைகள் போன்றவை ஆய்விற்கு உட்படுத்தப்பட்டதுடன் அவற்றின் கலைப்பெறுமதி, தொழிநுட்ப மற்றும் இரசாயனக்கலவை போன்றவை கண்டி யுகத்திற்குரிய புராதனப் பொருட்கள் என்று இனங்காணுவதன் பொருட்டு ஆய்வாளர்களினால் பகுப்பாய்விற்குட்படுத்தப்பட்டன.

Rijks அருங்காட்சியகத்திலுள்ள தங்கம் மற்றும் வெள்ளியினாலான உடைவாள்கள் இரண்டும் 1765 ஆம் ஆண்டு கண்டி அரச மாளிகையை கைப்பற்றி மேற்கொண்ட கொள்ளையடிப்பின் போது ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியினால் எடுத்துச் செல்லப்பட்டவை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் இந்த உடைவாள்கள் இரண்டும் அரச பட்டறையில் நிர்மாணிக்கப்பட்டவையாகும். மிகவும் அழகிய சிற்பங்களைக் கொண்டுள்ள கத்தியானது 18 ஆம் நூற்றாண்டில் கண்டிய சிற்பக் கலைஞர்களின் திறமையை வெளிக்காட்டுவதுடன், இது கண்டிய ஆடை அலங்காரத்தின் ஒரு அங்கமாகும்.

### கி. பி 1765 இல் கண்டி இராசதானிக் காலத்தில் அரசமாளிகை கைப்பற்றப்பட்ட போது ஒல்லாந்தரால் எடுத்துச் செல்லப்பட்ட அரும்பொருட்கள்!


தங்க உடைவாள் — தங்கக் கத்தி — வெள்ளி உடைவாள்


தங்கக் கத்தி

கண்டி யுகத்திற்குரிய பெரிய துப்பாக்கிகள் இரண்டும் மிகவும் சிறப்பாக செதுக்கப்பட்டவையாகும். இவை இலங்கையின் துப்பாக்கி பற்றிய தொழில்நுட்பத்தை பறைசாற்றும் சிறந்த நிர்மாணிப்புகளாகும். முறையே இருபத்தெட்டு கிலோ கிராம் எடையைக் கொண்ட இப்பெரிய துப்பாக்கிகள் இரண்டும் கண்டி அரசரின் படையணி பயன்படுத்திய இடம் மாற்றக் கூடிய பாரிய ஆயுதங்கள் பற்றிய அரிய சாட்சியாகும்.

தங்கம், வெள்ளி மற்றும் மாணிக்கக் கற்களினால் அலங்கரிக்கப்பட்ட லெவ்கே திஸாவைக்கு சொந்தமானது என்று கருதப்படும் பீரங்கியானது மிகவும் விசேடானதொரு தொல்பொருளாகும். சிற்ப வேலைப்பாடுகளையும் கண்டிய அலங்காரங்களையும் கொண்ட இத்துப்பாக்கியானது லெவ்கே திஸாவையினால் பரிசளிக்கப்பட்டது என்ற குறிப்பையும் கொண்டுள்ளது.

நெதர்லாந்து அரசாங்கத்தினால் சட்டரீதியாக இலங்கைக்கு இப்பொருட்களின் உரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆவணங்கள் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், இப்புராதனப் பொருட்களை இலங்கைக்கு எடுத்துவரப்படும் திகதி தீர்மானிக்கப்படும். இதன்போது விசேட கண்காட்சி ஒன்றை நடாத்துவதற்கு தேசிய அருங்காட்சியகத் திணைக்களம் தற்போது தயாராகி வருகின்றது.

"இப்பொருட்கள் நெதர்லாந்திற்கு கொண்டு செல்லப்பட்ட பின்னணியானது மிகவும் வேதனைக்குரிய விடயமாக இருப்பினும், அவை மீண்டும் இலங்கைக்கு கையளிக்கப்படுவதன் மூலம் இலங்கைக்கும் நெதர்லாந்திற்குமிடையிலான இராஜதந்திர ரீதியிலான உறவு வலுப்பெறுவதற்கு ஏதுவாக அமையும்" என தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளதுடன், அதற்கென மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு தேவையான அலுவல்களை மேற்கொண்டுவரும் புத்தசாசனம், சமய மற்றும் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அவர்களையும், அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன அவர்களையும், இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹொபாஷ் அவர்களையும் நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

இலங்கை மற்றும் நெதர்லாந்து நிறுவனங்களுக்கிடையில் கலாசார ஒத்துழைப்பு நிகழ்வுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் தொழிநுட்ப பரிமாற்றம், கல்வி மற்றும் பயிற்சி நிகழ்வுகள் போன்றனவும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அத்துடன் இவ்வொருமித்த செயற்பாடுகள் மூலம் நெதர்லாந்தில் உள்ள இலங்கைக்கு சொந்தமான இன்னும் பல புராதனப் பொருட்களை எதிர்காலத்தில் மீண்டும் இலங்கைக்கு கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அண்மையில் நிறுவப்பட்ட இலங்கை சார்பான ஆலோசனைக் குழுவினூடாக எதிர்காலத்தில் இப்பணிகள் முன்னெடுக்கப்படும்.

---

# கடன் மறுசீரமைப்பில் சீனாவிடமிருந்து உறுதியான உத்தரவாதம் இன்னுமில்லை!



இலங்கையின் கடன் மறுசீரமைப்பு கலந்துரையாடல் தொடர்பாக இந்தியா, ஜப்பான் மற்றும் இறையாண்மைக் கடனாளர்களின் பாரிஸ் கிளப் ஆகியவற்றின் நிதித் தலைவர்கள் கடந்த மாதம் கூட்டு மாநாட்டை நடத்தியிருந்தனர்.

இலங்கை கடந்த காலத்தில் வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொண்ட கடனை மீளச்செலுத்துவதில் நிலவுகின்ற பிரச்சினைகளை சிறந்த முறையில் கையாள்வது என்பது தொடர்பில் சீனாவிற்கும் ஏனைய கடன் வழங்குநர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் நிலவுவது குறித்து இம்மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி, இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதால், இலங்கையின் கடன் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் புதிய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம்மாநாடு குறித்த நோக்கமொன்றுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அம்மாநாட்டில் சீனா பங்கேற்றிருக்கவில்லை.

'பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை இன்னுமே முற்றாக மீளவில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை விரைவாக மீண்டெழ வேண்டுமானால் கடன் மறுசீரமைப்பு விரைவாக தேவைப்படுகிறது' என்பதே சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாடு ஆகும்.

கடன் மறுசீரமைப்பைப் பொறுத்தவரை சீனா எந்தவொரு சந்திப்பின் போதும் வெளிப்படையான கருத்துகளைத் தெரிவிக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை மாத்திரமன்றி சாம்பியா போன்ற சில நாடுகளும் வெளிநாடுகள் பலவற்றிடமிருந்து கடன்களைப் பெற்றுள்ளன. அந்நாடுகளுக்கும் கடன் மறுசீரமைப்பு அவசியமாகின்றது. ஆனால் அந்நாடுகளின் கடன் மறுசீரமைப்பு விடயத்திலும் சீனா திருப்தியான பதில்களைத் தெரிவிக்கவில்லையென்பதே உண்மை.

### சீன உயர்மட்டக் குழுவினர் இலங்கைக்கு வருகை தருகின்ற போதிலும், கடன் மறுசீரமைப்பு தொடர்பில் கருத்துகள் எதுவும் வெளியிடுவதில்லை!

அமெரிக்காவின் வொஷிங்டனில் நடந்த சந்திப்புகளில், இலங்கையின் கடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தாங்கள் இன்னும் அர்ப்பணிப்புடனேயே இருப்பதாக சீன பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் அந்த அறிவிப்பை சீன பிரதிநிதிகள் தெரிவித்திருந்த போதிலும், அது தொடர்பான அடுத்தகட்ட நகர்வுகளை சீனா இதுவரை முன்னெடுத்ததில்லை. அது பற்றிய எந்தவொரு சமிக்ஞையையும் சீனா இன்னும் வெளியிடவில்லை.




நிலைமை இவ்வாறிருக்கையில், இலங்கைக்கு அண்மையில் சீனாவின் யுனான் மாகாண ஆளுநர் வென்க் யூபோ, பிரீமியர் சூகோ போன்ற உயர்மட்ட பிரதிநிதிகள் சிலர் குறுகியகால விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்தனர்.

அவர்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்த போதிலும், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து எவ்விதமான கருத்துக்களையும் வெளியிடவில்லை என்பது இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். அக்குழுவினர் இலங்கையின் சில பகுதிகளுக்குச் சென்றிருந்தனர். நலிவுற்ற மக்கள் பலரையும் சந்தித்திருந்தனர்.

சீனப் பிரதிநிதிகளின் விஜயங்களின் போது ஒப்பந்தங்களதும் கைச்சாத்திடப்பட்டன. இலங்கையின் கரையோர மாவட்டங்களில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்வர்களுக்கு நிவாரணங்களும் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், இக்குழுவினரோ கடன் மறுசீரமைப்பு குறித்து எவ்விதமான கருத்துகளையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடன் மறுசீரமைப்பு விடயத்தில் சீனா இன்னுமே உறுதியான நிலைப்பாடொன்றை வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லையென்பதே இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

இந்த நிலைமையானது, சீனாவின் உறுதியான நிலைப்பாட்டை தற்போது வரையில் அறிந்து கொள்ள முடியாத சூழலையே ஏற்படுத்தியுள்ளது. இந்தியா, சீனா உட்பட பல நாடுகளில் இலங்கை கடந்த காலத்தில் கடன் பெற்றுக் கொண்டுள்ளது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில், அதன் மொத்த வெளிநாட்டுக்கடனில் பெருமளவு சீனாவிடம் பெற்றுக் கொண்டதாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனாவின் நிலைப்பாடு இன்னுமே தெளிவாக இல்லாததால் சிக்கலான நிலைமையொன்றே உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனாலும் இலங்கை கடந்த காலத்தில் பெற்றுக் கொண்ட வெளிநாட்டுக் கடனை மறுசீரமைக்கும் முயற்சியில் சீனா உதவும் என்று இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளதாக அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர் ஒருவர் சமீபத்தில் தெரிவித்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

வறிய நாடுகளுக்கு கடன் வழங்குவது தொடர்பாக சீனா நீண்ட காலமாகவே விமர்சனங்களை எதிர்கொண்டு வருகின்றது. சீனாவிடமிருந்து கடன் பெற்றுக் கொண்ட நாடுகள் அக்கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் திண்டாடுவதாகவும், அந்நாடுகள் சீனாவின் அழுத்தத்தால் பாதிக்கப்படுவதாகவும் பரவலாக செய்திகள் வெளிவருகின்றன.

எஸ். சாரங்கன்...

---

# நாற்பது இலட்சம் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்துவதில் இலங்கை, இந்திய, பிரிட்டிஷ் அரசுகளுக்கு பொறுப்பு உள்ளது

தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பியை கௌரவ தலைவராகக் கொண்டு தமிழ்நாட்டில் இலங்கை தமிழக மலையக தமிழர் தோழமை இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

தமிழ்நாடு திருச்சியில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை தமிழக மலையக தமிழர் தோழமை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினர்களாக கௌரவ தலைவர் மனோ கணேசன் எம்.பி, தலைவர் எம். எஸ் செல்வராஜ், துணைத் தலைவர்கள்பி.டி. ஜோன்,கே. ஏ. சுப்பிரமணியம், மிசா மாரிமுத்து, செயலாளர் சட்டத்தரணி தமிழகன், துணைச் செயலாளர்கள் சட்டத்தரணி ஈசன், டார்வின் தாசன் ஆகியோரும், செயற்குழு உறுப்பினர்களாக திருமதி செல்வராணி, திருமதி கலா மற்றும் ஆலோசகர் குழு உறுப்பினர்களாக முனைவர் ஸ்டீபன் ஆன்டணி, பிஜோய், சிவஞானம், டி. எஸ். எஸ். மணி, அஜித் மேனன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைதமிழக மலையக தமிழர் தோழமை இயக்க அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துக் கொண்ட உரையாற்றிய மனோ கணேசன் எம்.பி கூறியதாவது:

"இது ஒரு வரலாற்று முக்கியத்துவம்மிக்க நாள். இலங்கையில் வாழும் இந்திய தமிழக வம்சாவளி மலையகத் தமிழரும், இந்திய தமிழகத்துக்கு தாயகம் திரும்பியதாகச் சொல்லப்படும் தமிழகத்தில் வாழும் மலையக தமிழரும் அமைப்பு ரீதியாக ஒன்றுபடும் நாள்.

(06ஆம் பக்கம் பார்க்க)



### தமிழ்நாட்டில் உதயமான இலங்கை–தமிழக மலையக தமிழர் தோழமை இயக்கத்தின் கௌரவ தலைவராக தெரிவான மனோ கணேசன் எம்.பி வலியுறுத்தல்



## இந்தியாவின் பாரிய முதலீட்டு...

பெறுமதி சேர்க்கப்பட்ட ஃபெரோகுரோம் தயாரிப்புகளின் இந்தியாவின் முன்னணி ஒருங்கிணைந்த உற்பத்தியாளரான Indian Metals & Ferro Alloys Ltd (IMFA) இன் நிர்வாக இயக்குநராகவுள்ள சுப்ரகாந்த் பாண்டா, இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடாவுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலை நடத்தினார்.

சுப்ரகாந்த் பாண்டாவும் இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவும் FICCI மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகராலய அலுவலகம் ஆகியவற்றுக்கிடையிலான சாத்தியமான ஒத்துழைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது, இந்திய அரசு வழங்கிய உதவிகள் தொடர்பாக சுப்ரகாந்த் பாண்டாவுக்கு உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தெளிவுபடுத்தினார்.

## புலம்பெயர் தொழிலாளர்களால்...

புலம்பெயர் தொழிலாளர்களால் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## முதியோர், மாற்றுத்திறனாளிகள்,...

வழங்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 7 இலட்சத்து 60 ஆயிரத்துக்கும் அதிகமான மேன்முறையீடுகளும் சுமார் 10 ஆயிரம் ஆட்சேபனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

## நைஜீரிய பிரஜைக்கு...

வைத்திருந்தமை மற்றும் கடத்தியமை தொடர்பாக குற்றவாளியாக கண்டறியப்பட்டுள்ளார்.

இந்நிலையில், 245 கிராம் கொக்கையினுடன் இவர் கைது செய்யப்பட்டதையடுத்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பாலல்லே இந்த தீர்ப்பை வழங்கியுள்ளார்.

## லாப் Gas விலையும்...

இதன்படி, 12.5 கிலோ நிறை கொண்ட சமையல் எரிவாயுவின் புதிய விலை 3,690 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது.

இவேளை, 5 கிலோ நிறை கொண்ட லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை 120 ரூபாவால் குறைக்கப்பட்டு, ஆயிரத்து 476 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மிஸ் கலிபோர்னியா பட்டம்...

ஜூலி சாங் (Julie Chung) தனது டுவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

"இன்று நான் புதிய மிஸ் கலிபோர்னியா டீன் தாலியா பீரிஸை சந்தித்தேன். கிரீடம் அணிந்த முதல் அமெரிக்க வாழ் இலங்கையர் தாலியா, அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையே கலை மற்றும் அதற்கு அப்பாலுள்ள உறவுகளை உருவாக்க தனது தளத்தை பயன்படுத்துகிறார்" எனத் தெரிவித்துள்ளார்.

## சர்வேஸ்வர குருக்களுக்கு...

'சிவாகம கலாநிதி' சிறப்பு விருது மற்றும் தங்கப்பதக்க விருது வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

முத்தமிழ் குருமணிக்கு கிடைத்த இந்த விருது, ஈழத்து சிவாச்சாரியார்கள் அனைவருக்கும் மிகவும் பெருமையும் சிறப்பையும் தந்துள்ளதுடன், முத்தமிழ் குருமணிக்கு முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளரும் சர்வதேச இந்துமதபீடச் செயலாளருமான கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

## மின்சாரம் தாக்கியதில்...

போதே, இவர்கள் இருவரும் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. 71, 68 வயதுடைய வயோதிப தம்பதியினரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு வீட்டுப் பணிப்பெண் தகவல் வழங்கியதையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார், சடலங்களை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டுப் பணிப்பெண்ணிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார், மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## A/L, O/L பரீட்சைகள்...

விடுத்த விசேட அறிவித்தலிலேயே இதனைத் தெரிவித்தது.

2023 க.பொ.த. உயர்தரம் மற்றும் சாதாரணதரப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. 2023 க.பொ.த. உயர்தரம் மற்றும் சாதாரணதரப் பரீட்சைகளுக்கான அட்டவணைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சு அறிவித்தது.

இதன்படி, 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2023ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னர் நடைபெறுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் திட்டமிடப்பட்ட க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எதிர்வரும் 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடைபெறுமெனவும், கல்வி அமைச்சு தெரிவித்தது.

இதேவேளை, ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதி நடைபெறுமென்று கல்வி அமைச்சு முன்னதாக அறிவித்திருந்தது.

## கிராம சேவகர்கள்...

பொதுமக்களால் சமர்ப்பிக்கப்படும் சத்தியக்கடதாசிகள், ஆவணங்களை சான்றளிக்கும் அதிகாரம், சமாதான நீதவானுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமாகும்.

சம்பந்தப்பட்ட நீதவான்களை நியமித்த பின்னர், அவர்கள் உறுதிமொழி அளித்து நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும்.

இதற்கிடையில் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி, கடந்த 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ஆம் திகதி, 60 வயதுக்குட்பட்ட கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாமென்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பதவி வழங்குவதில், அந்தக் கால கட்டத்தில் அவர்கள் ஆற்றிய சமூக சேவைகளை கருத்தில் கொண்டு மாற்றுக் கல்வித் தகுதிகள் பரிசீலிக்கப்படுமென்றும், அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, கல்வித் தகுதியின் அடிப்படையில் மாத்திரம் சமாதான நீதவான்களை நியமிப்பது பொருத்தமானது அல்லவென, முன்னாள் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், சமூக சேவையில் அர்ப்பணிப்புடன் செயற்படும் நபர்களை தெரிவுசெய்யும் பணியை மேற்கொண்டு வருவதாகவும், அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

## ஆய்வுகள் சரியான முறையில்...

உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் முன்வைத்த கேள்வியொன்றுக்கு பதிலளித்த போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"எல்.எச்.ஐ. நிறுவனம் தொடர்பாக எனது கவனத்துக்கு கொண்டு வந்தமைக்கு ரவூப் ஹக்கீம் எம்.பி.க்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

ஒலுவில் துறைமுகம் மாத்திரமின்றி, நாட்டில் ஏனைய சில பிரதேசங்களிலும் இந்தப் பாதிப்புகள் காணப்படுகின்றன. கடலரிப்பு தொடர்பான ஆய்வுகள் சரியாக இடம்பெறாமையே இதற்கு காரணம். அரசியல் காரணங்களுக்காக அந்த ஆய்வுகள் மறுதலிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டதாக எமக்கு தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஒலுவில் தொடர்பாக எழும் கேள்வி என்னவென்றால், இந்த துறைமுகம் கடந்த 10 வருடங்களாக பயன்பாட்டில் இல்லை. அப்படியானால், அந்த இடம் அடைக்கப்பட்டு விட்டது. அடைக்கப்பட்ட பின்னரும் ஏனைய இடங்களில் கடலரிப்பு இடம்பெறுமானால், இதன் காரணமாகவா அல்லது இயற்கை காரணமாகவா ஏன் அவ்வாறு இடம் பெறுகிறது என்பது தொடர்பாகவும் ஆராய வேண்டியுள்ளது.

எவ்வாறெனினும், சம்பந்தப்பட்டவர்களுடன் அது தொடர்பாக நாம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். அதன்போது, இந்த விடயம் தொடர்பாக சபையின் கவனத்துக்கு கொண்டு வந்த ரவூப் ஹக்கீம் எம்.பி.க்கும் அழைப்பு விடுக்கப்படும். அப்போது, அவர் தனது கருத்துகளை முன்வைக்க முடியும்" எனத் தெரிவித்தார்.

## 2023 வருட இறுதிக்குள்...

முதல் காலாண்டில் நடத்துவதற்கான பரீட்சை ஏற்பாட்டு நடவடிக்கைகள் பரீட்சை திணைக்களத்தால் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்படுவதுடன், சாதாரணதரப் பரீட்சை உட்பட பரீட்சார்த்திகளின் தகவல்களை வெளித் தரப்பினருக்கு பெற்றுக்கொடுப்பதை நிறுத்துமாறு அனைத்து மாகாண மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு தொழில் பயிற்சி வழங்கும் வேலைத்திட்டங்கள், திட்டமிடும் நடவடிக்கைகளில் வெளித்தரப்பினரின் தலையீடுகள் இல்லாமல் கல்வி அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களுடன் இணைந்து பாடசாலை கட்டமைப்புக்குள்ளேயே சுயாதீனமாக மேற்கொள்ள முடியுமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 28ஆம் திகதிக்கு முன் Online...

திகதிவரை நிகழ்நிலை (Online) முறைமையில் கோரப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ.அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அதற்கமைய, சகல விண்ணப்பதாரிகளும் Online முறைமையில் மட்டுமே இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk ஊடாகவோ அல்லது www.onlineexams.gov.lk/eic ஊடாகவோ அல்லது திணைக்களத்தின் உத்தியோகபூர்வ செல்லிடத் தொலைபேசி செயலி (Mobile App) 'DoE' ஊடாகவோ பிரவேசித்து உரிய அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து,

அதற்கமைய சரியாக Online முறைமையில் விண்ணப்பிக்க வேண்டுமெனவும், பரீட்சைகள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்காக அரச அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் தங்கள் அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தனிப்பட்ட முறையிலும் விண்ணப்பிக்கலாம்.

அரச அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலுள்ள அதிபர்களுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்காக பயன்படுத்த வேண்டிய பயனுநர்சொல் (user name), கடவுச்சொல் (password) என்பன அனுப்பி

வைக்கப்பட்டுள்ளதுடன், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களது தேசிய அடையாள அட்டை எண்ணை பயன்படுத்தி Online முறைமையில் சமர்ப்பிக்க வேண்டும்.

பாடசாலை தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதன் PDF படிவத்தை உடனடியாக அச்சுப் பிரதியொன்றை எடுத்து வைத்துக்கொண்டு தேவையான சந்தர்ப்பத்தின் போது, அதனை சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும்.

2022 க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுகளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளாயினும், இரண்டாம் தடவையாக பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்த்துள்ள பரீட்சார்த்திகளாயினும் 2023.07.28ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள முடியும்.

நேரடி தொலைபேசி இலக்கம் 1911, 011 2784208, 0112 784537, 0112 786616, தொலைநகல் இலக்கம் 0112 74422, பொதுத் தொலைபேசி இலக்கங்கள் 0112 784200, 0112 7844201, 0112 74202 (நீடிப்பு 263, 265, 280, 282, 443) மின்னஞ்சல்

முகவரி – gcealexam@gmail.com என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சீ.அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

## 'விசும்பாய' கட்டடம்...

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனையின் பிரகாரம் பழமைக்கு சேதம் ஏற்படாத வகையில் பெறுமதியான காணிகள் மற்றும் கட்டடங்களை முதலீடு செய்யும் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த வேலைத்திட்டத்தின் கீழேயே விசும்பாய கட்டடம் உயர்ரக ஹோட்டலாக மாற்றப்படும்.

நாட்டின் பொருளாதார நிலைமையின் அடிப்படையில், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணத்தை செலவழிக்காமல், தனியார் மற்றும் பொதுப் பங்களிப்புடன், இவ்வாறான புராதன கட்டடங்களை அபிவிருத்தி செய்வதே நோக்கமாகும்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த உயர்தர ஹோட்டலாக (Boutique Hotel) இது உருவாக்கப்படுமென்பதுடன், உயர்தர சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஆடம்பர அறைகள், பொதுவான பகுதிகள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றை இக்ஹோட்டல் கொண்டிருக்கும்.

1835ஆம் ஆண்டு ஒகஸ்ட் 24ஆம் திகதி காலனித்துவ காலத்தில் மன்னர் வில்லியம் என்பவரால் கட்டப்பட்ட இந்தக் கட்டடம், இலங்கை ரைபிள் படைப்பிரிவு அதிகாரிகளின் தங்குமிடமாக நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டது. வெளிநாட்டு கட்டடக் கலைப்படி கட்டப்பட்ட இந்தக் கட்டடம் முதலில் அக்லாண்ட் ஹவுஸ் (Acland House) என்று அழைக்கப்பட்டது. கொழும்பு நகரின் மத்தியிலுள்ள புராதன மதிப்புள்ள கட்டடமென்று இதனைக் கூறலாம்.

1971ஆம் ஆண்டு காலனித்துவ காலத்தை சேர்ந்த விசும்பாய கட்டடம், கையகப்படுத்தும் சட்டத்தின் 35ஆவது பிரிவின் கீழ் அரச சொத்தாக அரசால் கையகப்படுத்தப்பட்டது.

இதேவேளை, இந்த பிரமாண்டமான கட்டடத்தை தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக மாற்றிய அரசியல்வாதிகளும்உள்ளனர்.சிறிமாவோ பண்டாரநாயக்க, டி.எம்.ஜயரத்ன, அநுருத்த ரத்வத்த, லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்ற அமைச்சர்கள் இந்த பிரமாண்டமான கட்டடத்தை தமது உத்தியோகபூர்வ இல்லமாக அவ்வப்போது தெரிவு செய்திருந்தனர்.

கொழும்பில் அமைந்துள்ள ஓர் அழகிய கட்டடம் விசும்பாய. இதன் காரணமாக இந்த அக்லாண்ட் ஹவுஸ் கட்டடம் பல இராஜதந்திர தலைவர்களின் தற்காலிக தங்குமிடமாகவும் பயன்படுத்தப்பட்டது. இந்திரா காந்தி இலங்கை வந்த போது, விசும்பாயவில் தங்கியிருந்தார்.

விசும்பாய கட்டடத்தின் தனித்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இது உருவாக்கப்படும்.

விசும்பாய முற்றத்திலுள்ள பெரிய இடம் வெளிப்புற கச்சேரிகள் மற்றும் திருமணங்களுக்கு ஒதுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஈ.ஏ.சி.பிரியஷாந்த, ஹுனாஸ் ஹோல்டிங் பி.எல்.சி.யின் தலைவர் தனுக சமரசிங்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தயாசிறி மகனின்...

அச்சுறுத்தியதுடன், கத்தியை காட்டி மிரட்டி அவரிடமிருந்த சுமார் 160,000 ரூபாய் பெறுமதியான வெள்ளைத்தங்க நகையை சந்தேக நபர் திருடிக்கொண்டு தப்பிச் சென்றுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நாட்டில் இனவாதம்...

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விமான போக்குவரத்து திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். பாராளுமன்றத்தில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"சில அரச சார்பற்ற அமைப்புகளும் இந்நாட்டின் வீழ்ச்சிக்காக செயற்பட்டு வருகின்றன. அவை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் செயற்பட்டு வருகின்றமையை குறிப்பிட வேண்டும். சில மக்கள் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் தகவல்களை வைத்துக்கொண்டு பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்றார்கள்.

அதனை மக்கள் மயப்படுத்துகின்றார்கள். அவை விமான சேவை நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அதன் மூலம் மக்கள் மத்தியிலுள்ள நம்பிக்கையும் பாதிக்கப்படுகிறது.

ஒரு நிறுவனம் தொடர்பாக கருத்துகளை முன்வைக்கும் போது, அந்த நிறுவனத்தின் நட்டம் தொடர்பாகவும் சிந்தித்து கருத்துகளை வெளியிட வேண்டும்.

1977ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க கைதிகளை பரிமாற்றம் செய்யும் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு, அது பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சில குற்றவாளிகள் குற்றம் புரிந்துவிட்டு, வெளிநாடுகளுக்கு சென்று தலைமறைவாக வாழ்கின்றனர்.

அவர்களில் ஊழல் மோசடி மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பானவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இந்தக் கைதிகள் பரிமாற்ற சட்டத்தால், அவ்வாறு வெளிநாட்டில் உள்ளவர்களை மீண்டும் நாட்டுக்கு கொண்டுவர முடியாத நிலை காணப்படுகின்றது. எமது நாட்டின் பாதுகாப்புக்காக புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இத்தகைய நிலைமைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். நிலைமைகள் மாறும் போது, காலத்துக்கு காலம் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றார்.

## ராகுல்காந்தி தாக்கல் செய்த...

முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தாக்கல் செய்த மனுவையும் குஜராத் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கடந்த 2019ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, மோடி பெயர் தொடர்பாக சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்தார். இது தொடர்பாக ராகுல் காந்தி மீது குஜராத் பா.ஜ.க. எம்.எல்.ஏ. பூர்னேஷ் மோடி குற்றவியல் அவதூறு வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கில் ராகுல் காந்திக்கு சூரத் பெருநகர மஜிஸ்திரேட் நீதிமன்றம் இரண்டாண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. அதனால், அவர் தனது மக்களவை எம்.பி. பதவியை இழந்தார்.

அதை எதிர்த்து சூரத் செசன்ஸ் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த ராகுல் காந்தி, அவதூறு வழக்கு தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்கக் கோரி மனுத் தாக்கல் செய்தார். ஆனால், அவருக்கு பிணை வழங்கிய செசன்ஸ் நீதிமன்றம், தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க மறுத்துவிட்டது. அதையடுத்து, குஜராத் உயர் நீதிமன்றத்தை ராகுல் காந்தி நாடினார்.

கடந்த மே மாதம் நடந்த விசாரணையின் போது, அவதூறு வழக்கு தீர்ப்புக்கு இடைக்காலத்தடை விதிக்க மறுத்த குஜராத் உயர் நீதிமன்ற நீதிபதி ஹேமந்த் பிரச்சாக், கோடைகால விடுமுறைக்கு பின் இறுதித் தீர்ப்பு வழங்கப்படுமென்று தெரிவித்தார்.

இந்நிலையில், குஜராத் உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வெளியிட்ட வழக்கு அட்டவணையின் படி, ராகுல் காந்தி மீதான அவதூறு வழக்கில் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு தீர்ப்பளிக்கப்பட்டது.

## இலங்கை மிகவும்...

இந்திய சுற்றுலா சம்மேளன நிகழ்வில் உரையாற்றிய போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்லைகளுக்கு அப்பால் பிம்ஸ்டெக் (BIMSTEC) வலயத்தை அபிவிருத்தியடைந்த சுற்றுலாப் பிரதேசமாக மேம்படுத்த அனைத்து பிம்ஸ்டெக் நாடுகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் அழைப்பின் பேரில் இந்திய சுற்றுலா சம்மேளனம் ஏற்பாடு செய்த இந்த மாநாடு 'எல்லைகளை கடந்து வாழ்வை மாற்றும்' என்ற தொனிப்பொருளில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (06) ஆரம்பமாகியதுடன் எதிர்வரும் 09ஆம் திகதிவரை நடைபெறும்.

இலங்கை பாதுகாப்பான மற்றும் கவர்ச்சிகரமான சுற்றுலாத்தலமென்பதை உலகுக்கு அறிமுகப்படுத்த நடத்தப்படும் இந்த மாநாட்டில், இந்திய சுற்றுலாப் பயண முகவர் சம்மேளத்தைச் சேர்ந்த சுமார் 500 பேர் கலந்துகொண்டுள்ளனர்.

இதில் செய்தி சேகரிப்பதற்காக சுமார் 50 இந்திய ஊடகவியலாளர்கள் வருகை தந்துள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"இந்த மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் திருமதி. ஜோதி எங்கள் மீது வைத்த நம்பிக்கைக்கு நன்றி கூற வேண்டும். புதிய திட்டங்களினூடாக இலங்கையை மிகவும் கவர்ச்சிகரமான சுற்றுலாத்தளமாக மாற்றுவேனென நான் உறுதியளிக்கிறேன். அதற்காக எமது சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார்.

இந்த மாநாட்டுக்கு பின்னர், இங்கு வருகை தந்துள்ள பலர் இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு செல்வார்கள். திருகோணமலை கோணேஸ்வர ஆலயத்தையும் கதிர்காமக்கந்தன் சந்நிதியையும் தரிசிக்க தவறாமல் செல்ல வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆலயம் 2,000 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது. வலயத்தில் மிகப் பழைமையான ஆலயமொன்றாகும். சில நாட்களுக்கு முன்னர் அங்கு சென்றிருந்த போது, பெருமளவிலான மக்கள் கூடியிருந்தனர். அத்துடன், யாழ்ப்பாணத்தில் நல்லூருக்கு சென்று வருடாந்த உற்சவத்தை கண்டுகளிக்கலாம். மலைகளையும் மற்ற அழகிய இடங்களையும் நீங்கள் பார்த்திருந்தாலும், நான் இங்கு கூறிய இடங்களும் கட்டாயம் பார்க்க வேண்டிய இடங்களாகும். ஒகஸ்ட் மாதம் நல்லூர் திருவிழாவும் கண்டி பெரஹராவும் நடைபெறுகின்றன. இது எமது கலாசாரத்தை உலகுக்கு எடுத்துரைக்கிறது. ஒரு சிறப்பு சுற்றுலா ஈர்ப்புள்ள தளமாக இது திகழ்கிறது. காலி இலக்கிய விழா ஜனவரி மாதம் நடைபெறுகின்றது. தென்மாகாணத்தின் காலியிலுள்ள ஒவ்வொரு நகரத்திலும் தனித்துவமான திருவிழாக்கள் உள்ளன. ஹிரிகெட்டிய கடற்கரையில் சுற்றுலா பயணிகளை கவரும் டிஸ்கோடெக் நவீன ஜாஸ் இசை என்பன பல இருக்கின்றன. மாத்தறையில் பல பாரம்பரிய இசைக் கச்சேரிகள் நடைபெறுவதுடன், ஜனவரி மாதம் கொழும்பில் ஆண்ட்ரியோ பொசெல்லியின் பாடலைக் கேட்கலாம்.

## நாற்பது இலட்சம் தமிழர்களுக்கு... (05ஆம் பக்கத் தொடர்)

இதன்மூலம் இலங்கையில் வாழும் இந்திய தமிழக வம்சாவளி மலையக தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது அபிலாஷைகள் தொடர்பில் தமிழகத்தில் புதிய ஒளி பாய்ச்சப்படுகிறது. அதேபோல் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்பட்டு தமிழகத்தில் வாழும் மக்களின் துன்பங்களையும் அறியக் கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் ஏறக்குறைய பதினைந்து இலட்சம் இந்திய தமிழக வம்சாவளி மலையக தமிழர் வாழ்கிறார்கள். அதேபோல் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்படுவோர் தமிழகத்தில் இருபத்தைந்து இலட்சம் பேர் வாழ்கிறார்கள். மொத்தம் நாற்பது இலட்சம்.

இந்த இருபத்தைந்து இலட்சம் பேருடன் சேர்த்து மொத்தம் நாற்பது இலட்சம் பெரும் இலங்கையில் குடியுரிமையுடன் வாழ்ந்திருக்க வேண்டும். வாழ்ந்திருந்தால் இலங்கை பாராளுமன்றத்தில், நாம் நாற்பது எம்.பிக்கள் இருந்திருப்போம்.

அதன்மூலம் அரசியல்ரீயாக நாம் பலம் பெற்று இருந்திருப்போம். எம்மை மீறி எவரும் இலங்கையில் அரசு அமைக்க முடியாது.

ஆகவே எமது உரிமைகள் பறிக்கப்படும் நிலைமை ஒருபோதும் உருவாகி இருக்காது. ஆனால், 1948 இல் எமது குடியுரிமை பறிக்கப்பட்டது. அதன்பிறகு வாக்குரிமை பறிக்கப்பட்டது. அன்றைய நமது தொழிற்சங்கத் தலைமைகள் மக்களை அணிதிரட்டி போராட்டங்களை செய்ய தவறினார்கள்.

அப்போது காத்திரமாக செயற்பட்டு இலங்கை அரசை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தவறிய, இந்திய அரசு, அதன் பின் 1964 இல் எம்மிடம் கலந்து ஆலோசிக்காமலேயே பெருந்தொகையான எமது மக்களை இந்தியாவுக்கு திருப்பி அழைத்து எம்மை பலவீனமடையவும் செய்து விட்டது.

அன்று அவ்வாறு தாயகம் திரும்பிய மக்களின் வாழ்நிலைமையும் மிகவும் மோசமாகவே இருக்கிறது. இவர்களுக்கு சரியான நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்துத்தர இந்திய அரசு தவறி விட்டத்தையும் இன்று நான் கண்கூடாக காண்கிறேன்.

மறுபுறம், 1948 முதல் 1972 வரை, இலங்கை பிரிட்டிஷ் முடியாட்சியின் கீழ்தான் இருந்தது. அதன் பிறகுதான் இலங்கை குடியரசானது. குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோதும்,1956 சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும், 1964 இல் சிறிமாசாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும், பிரிட்டிஷ் அரசு வாய்திறக்கவில்லை. அன்றைய நமது தொழிற்சங்க தலைமைகளும் இந்த அநீதிகளை பிரிட்டீஷ் முடியாட்சிக்கு எடுத்துக் கூறி, நியாயம் கேட்கவும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேல் எமது மூதாதையினரை 1823 முதல் இலங்கைக்கு கொண்டு சென்று, தமக்கு ஏற்றுமதி வருவாய் தந்த பெருந்தோட்டங்களை அமைத்ததும், பிரிட்டிஷ் முடியாட்சித்தான்.

ஆகவே இந்த ஒட்டு மொத்தம் நாற்பது இலட்சம் தமிழர்கள் தொடர்பாக இலங்கை அரசு, இந்திய அரசு, பிரிட்டிஷ் அரசு ஆகியவற்றுக்கு பெரும் தார்மீக பொறுப்பும், கடமையும் இருக்கின்றன. இந்த மூன்று அரசுகளும் முன்வந்து எமக்கான நல்வாழ்வு திட்டங்களை அமைத்துத் தர வேண்டும். அதை நாம் இனி தேசிய, சர்வதேச அரங்குகளில் வலியுறுத்தி தீர்வுகளை தேடி பெறுவோம். இலங்கைதமிழக மலையக தமிழர் தோழமை இயக்கத்தின் மூலம் இந்த நோக்கங்களை நாம் வலியுறுத்துவோம்" என்று குறிப்பிட்டார்.

# கிழக்கின் குரல்



## வெல்லாவெளியில் இரண்டு நாளில் இரு வீடுகள் உடைத்து திருட்டு

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

மட்டு. வெல்லாவெளியில் இரண்டு நாளில் இரு வீடுகள் உடைத்து 8 இலட்சம் பெறுமதியான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளதால் பொது மக்கள் விழிப்பாக இருக்குமாறு பொலிசார் கோரிக்கை.


மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் இரண்டு நாட்களில் பூட்டியிருந்த இரு வீடுகளை திருடர்கள் உடைத்து அங்கிருந்து 8 இலட்சம் ரூபா பெறுமதியான 5 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளதாக நேற்று வெள்ளிக்கிழமை(7) வெல்லாவெளி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி சப் இன்பெக்ஸ்டர் எம். ஜி.பி.எம்.எம். ஜெசூலி முகமட் தெரிவித்தார்.

குறித்த பொலிஸ் பிரிவிலுள்ள திக்கோடை பிரதேசத்தில் சம்பவ தினமான புதன்கிழமை வீட்டின் உரிமையாளரான பெண் ஒருவரும், அவரது 3 வயது குழந்தையும் வீட்டை பூட்டிவிட்டு உறவினர் ஒருவரின் மரணவீட்டிற்கு சென்று திரும்பிய நிலையில் வீட்டின் கூரையை கழற்றி உள் நுழைந்த திருடன் அங்கிருந்து கைச்செயின் ஒன்றையும்,மோதிரம் மூன்றையும், கையடக்க தொலைபேசி ஒன்றையும் திருடிச் சென்றுள்ளான்.

இதேவேளை வெல்லாவெளி கமலநல சேவைகள் திணைக்களத்துக்கு அருகாமையிலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளரான பெண் ஒருவர் சம்பவதினமான நேற்று முன்தினம் காலை வேலைக்கு சென்று மதிய உணவிற்காக ஒரு மணியளவில் வீடு திரும்பிய நிலையில் பூட்டியிருந்த வீட்டை உடைத்து அங்கிருந்த 4 பவுண் நெக்கிலஸ், தங்க ஆபரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இச் சம்பவங்கள் தொடர்பாக தடவியல் பொலிஸ் பிரிவு வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் 'தராக்கி' ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூல் வெளியீடு



கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் இலங்கை, சிவராம் ஞாபகார்த்த மன்றம் சுவிஸ் ஆகியன இணைந்து தொகுத்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராம் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய 'தராக்கி' ஈழத் தமிழ் ஊடக முன்னோடி நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இத் தொகுப்பில் ஊடகத்துறை ஆளுமைகள், நண்பர்கள், உறவுகள் என 41 பேர் எழுதிய கட்டுரைகள் இத் தொகுப்பில் உள்ளடங்குகின்றன.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல். தேவஅதிரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், ஊடகவியலாளர் சபீனா சோமசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். நூல் அறிமுகத்தினை மகுடம் ஆசிரியர் மைக்கல் கொலின் நிகழ்த்துகிறார்.

நூல் வெளியீட்டைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், செல்வராசா கஜேந்திரன், இராசபுத்திரன் சாணக்கியன் ஆகியோரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி, பாக்கியசெல்வம் அரியநேத்திரன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன், காத்தான்குடி நகர சபை நூலகர் திருமதி க.ருத்ரகுமார், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆர். பாரதி, 'ஆகவே' ஜபார், தொழில்சார் இணைய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பெர்டி கமகே ஆகியோரும் உரையாற்றவுள்ளனர். நிகழ்வின் நிறைவாக கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் நன்றியுரையாற்றுவார்.

## மட்டக்களப்பில் உணவகங்களில் திடீர் சோதனை



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட புளியந்தீவு,கோட்டைமுனை,கல்லடி,வெட்டுக்காடு உள்ளிட்ட பகுதிகளில் உணவு தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள்,சிற்றுண்டிச்சாலைகள்,உணவு தயாரிக்கும் இடங்களில் (06) திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உணவு பாதுகாப்பு இல்லாமல் மனித பாவனைக்குதவாத உணவுகள் காணப்பட்ட சில ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், உணவு தயாரிக்கும் இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சுகாதார அதிகாரிகளினால் நேற்று 37 உணவகங்கள் திடீர் பரிசோதனைக்கு உற்படுத்தப்பட்டதுடன் சுகாதார முறையின்றி காணப்பட்ட 10 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டதுடன் 11 உணவகங்களுக்கு இதன் போது தற்காலிக சீல் வைக்கப்பட்டுள்ளது.

## வாச்சிக்குடா பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு

**வாச்சிக்குடா விசேட நிருபர்**



அக்கரைப்பற்று வாச்சிக்குடா திருவருள்மிகு ஸ்ரீ ராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயர் தேவஸ்தான புணராவர்த்தன நவகுண்டபஷ அஷ்ட பந்தணப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற ஆஞ்சநேயரின் திருவருளும் குருதேவர் காயத்திரி சித்தர் ஆர்.கே.முருகேசு சுவாமிகளின் பூரண ஆசீர்வாதத்துடன் ஸ்ரீஹனுமன் தாசர் ஸ்ரீ ராம்ஜி சுவாமிகளின் குரு ஆசிகளும் கை கூடியுள்ளது. இதனை முன்னிட்டதான எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நேற்று ஆரம்பமானது.

கடந்த 05ஆம் திகதி கருமாரம்ப கிரியைகளோடு ஆரம்பமானது. அக்கரைப்பற்று வாச்சிக்குடா பஞ்சமுக ஆஞ்சநேயர் ஆலயம்.

இலங்கையில் பல ஆஞ்சநேயர் ஆலயங்கள் இருந்தாலும் ஐந்து முகங்களுடன் ஐந்தடி உயரத்தில் திருக்காட்சி தரும் ஸ்ரீராமபக்த பஞ்சமுக ஆஞ்சநேயரின் கற்சிலை அமைந்துள்ள ஆலயம் இது ஒன்றே என்பதே இங்கு சிறப்பு.

## உப்பு உற்பத்திக்கான நிர்ணய விலை கிடைப்பதில்லை; உற்பத்தியாளர்கள் கவலை

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் வில்வெளி,கச்சக்கொடித்தீவு போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய சுமார் 68 ஏக்கர் உப்பு உற்பத்தி செய்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆனால் இவர்களுக்கு உப்பு உற்பத்திக்கான நிர்ணய விலை கிடைக்காமை தொடர்பில் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு 2000/2500 ரூபா அளவில் விற்பனை செய்யப்பட்டு வந்த உப்பு இந்த வருடம் 500/ 600 ரூபாவாகவே உள்ளது.

உப்பு உற்பத்தியை நம்பி வாழும் 300 குடும்பங்கள் பாதிப்பினை எதிர்நோக்குவதாகவும், தற்போது பதப்படுத்தப்பட்டு செய்கைக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மாரி மழை காலங்களில் நன்னீர் கலப்பு தங்களது உற்பத்திக்கு பெரும் சவாலாகவே உள்ளது.

ஒட்டு மொத்தமாக நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்களிக்கும் இவ்வாறான உப்பளங்களை விருத்தி செய்வதற்கு உரிய அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மட்டக்களப்பு கோட்டைப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

**கல்லடி குறூப் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் விதமாக மாவட்டத்தில் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகள் மற்றும் சிரமதானங்கள் பரவலாக நடைபெற்று வருகின்றன.

அதற்கிணங்க மாவட்ட செயலாளர் கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே மதிவண்ணனின் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் (06) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது செயலகத்தில் சேவையாற்றுகின்ற பல்வேறு அரச திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிளைகளின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் சக அலுவலர்கள் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் மாவட்ட பூச்சியியலாளர் கே. தர்ஷினி டெங்கு பரிசோதனை கள விஜயத்தின் போது, காணப்பட்ட டெங்கு குடம்பிகள் உருவாகும் இடங்களை அடையாளப்படுத்தப்பட்ட விபரங்களுடன் தெளிவு படுத்தினார்.

கலந்துரையாடலின் இறுதியில் மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணனின் தலைமையில் (07) வெள்ளிக்கிழமை செயலக வளாகத்திலுள்ள 12 இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு, சிரமதானம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.

ஒவ்வொரு பகுதிகளும் மாவட்ட செயலகத்திலுள்ள இரண்டு அல்லது மூன்று திணைக்களப் பிரிவுகள் குழுக்களாக, மாவட்ட செயலகம் அமைந்துள்ள கோட்டைப் பகுதி, கோட்டை முன் மற்றும் பின் நுழைவாயில் பகுதிகள், வாவியை அண்மித்த இடங்கள், போன்ற செயலக வளாகத்தின் இடங்களில் சிரமதானம் மேற்கொள்வதற்கான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 'மனு மெஹெவர' முயற்சியின் கீழ் திருகோணமலை வைத்தியசாலைக்கு (Reverse Osmosis) பிரிவு அன்பளிப்பு



இலங்கையின் மிகப் பெரிய, புகழ்பெற்ற, மற்றும் 120 வருடங்களுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்ட துரித உணவு, உணவகச் சங்கிலியான பெரேரா & சன்ஸ் பேக்கர்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (P&S) நிறுவனம் சமூகத்தின் மீது கொண்டுள்ள அக்கறை மற்றும் கரிசனையை வெளிக்காட்டும் விதமாக இன்னுமொரு கூட்டாண்மை முன்முயற்சியினை செயல்படுத்தியுள்ளது. இலங்கை கடற்படையுடன் இணைந்து, P&S நிறுவனம் தனது மனு மெஹெவர முயற்சியின் கீழ் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அதிநவீன ரிவர்ஸ் ஒஸ்மோசிஸ் (Reverse Osmosis/ RO) பிரிவை அன்பளிப்பாக வழங்கியுள்ளதன் மூலம் அதன் சமூக பொறுப்பினை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த பங்களிப்பானது மருத்துவமனையின் நோயாளிகள் மற்றும் ஊழியர்களுக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளதோடு, இவர்களது நல்வாழ்வையும் உறுதி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தினமும் சுமார் 2,000 நோயாளிகள் இம்மருத்துவமனைக்கு வந்து செல்வதால், சுத்தமான தண்ணீர் இவர்களுக்கு கிடைப்பது மிக முக்கியமானது. இதனடிப்படையில், புதிய RO பிரிவானது இவ்வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் (OPD) நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவமனையில் உள்ள அனைவரும் பயனடைவார்கள். இந்த RO பிரிவானது ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சியின் (SDG) இலக்கு 6க்கு இணங்க (சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம்), நிலைத்தன்மை மற்றும் வாழ்க்கையை மேம்படுத்துவதில் P&S இன் திடமான உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது. இத்திட்டமானது திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலைக்கு P&S வழங்கிய இரண்டாவது RO பிரிவாக அமைகின்றது. இதன் மூலம் மக்களுக்கு சுத்தமான தண்ணீருக்கான அணுகலை மேலும் எளிதாக்கியுள்ளது.

இது போன்ற முன்முயற்சிகள் மூலம் P&S நிறுவனம், அது சேவை செய்யும் சமூகங்களை மாற்றுவதற்கும் மேம்படுத்துவதற்கும் கொண்டுள்ள அர்ப்பணிப்பை தெளிவாக வெளிப்படுத்துகிறது.



அகில இலங்கை சமூக சுற்றாடல் வலுவூட்டல் அமைப்பினால் ஏற்பாடு செய்த கௌரவ விருது வழங்கும் விழா அண்மையில் வோட்டஸ் ஏஜ் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வில் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் ஆலய அறங்காவலர்களில் ஒருவரான விநாயகம் கதிரவேலுக்கு அவரின் மிகச் சிறந்த சேவையை பாராட்டி தேசமான்ய பட்டம் வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம்.



Lion club of Colombo grandway நிர்வாக சபை உறுப்பினர்கள் பதவி ஏற்ற நிகழ்வு வெஸ்லி கல்லூரி விளையாட்டு கழக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் 2023/ 2024 ஆண்டுக்கான தலைவராக ரா. ஜோன்ஸ்டன் தெரிவு செய்யப்பட்டார். PDG lion P.மகேந்திரன் மற்றும் அவரது பாரியார் Lion சங்கீதா MJF ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## மட்டக்களப்பில் இளைஞர்களுக்கான சர்வ மத நல்லிணக்க மாநாடு

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் இளைஞர்களிடையே சமாதான இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மாகாண ஆளுநரின் பணிப்புரையின் பெயரில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பில் எல்லைகள் கடந்த இளைஞர்கள் எனும் சர்வ மத நல்லிணக்க மாநாடு வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது. இதேவேளை நிலையான அபிவிருத்திக்கு இளைஞர்களிடையே சமாதானத்தை கட்டி எழுப்பும் நோக்குடன் இந்த மாநாடு நடைபெற்றது. மட்டக்களப்பு காவியா சுய அபிவிருத்தி பெண்கள் அமைப்பின பணிப்பாளர் திருமதி யோகமலர் அஜித்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்தந்தை எ.நவாஜி அடிகளார் மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை பிரதி ஆணையாளர் உ.சிவராஜா, மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதி இணைப்பாளர் ஏ.இசதின், மட்டக்களப்பு வலைய முன்னாள் கல்வி பணிப்பாளர் திருமதி சுபா.சக்கரவர்த்தி உள்ளிட்ட பலர் இதன்போது கலந்து கொண்டுகொண்டனர்.

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நலன்புரி விடயங்கள் விரைவில் சட்டமாக்கப்படும்

ஹற்றன் சுழற்சி நிருபர்



பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும், அவர்களுக்கான நலன்புரிசார் விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதற்கமைய இது தொடர்பான சட்டமூலத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இணக்கம் தெரிவித்துள்ளதாக இ.தொ.காவின் உப தலைவரும், தேசிய தொழில் ஆலோசனை சபை உறுப்பினருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பாரத் அருள்சாமி,

" இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை பெருந்தோட்ட தொழிலாளர்களே வழங்கினர். எனவே, பெருந்தோட்ட தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்களை உள்ளடக்கிய விசேட சட்டமொன்று இயற்றப்பட வேண்டுமென இதொகாவின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதி, தொழில் அமைச்சர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் உள்ளிட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு தற்போது வெற்றி கிட்டியுள்ளது.

தொழில் சட்டத்துக்கு புறம்பாக மேலதிக சட்டமாகவே இது அமுலுக்குவரும். இது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைத்துள்ள அங்கீகாரமாகும்.

கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தம் மூலமே நலன்புரி விடயங்கள் பாதுகாக்கப்பட்டன. எனினும், நலன்புரி விடயங்கள் முழுமையாக தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை.

இந்நிலையில் தற்போது சட்டம் ஊடாக தொழில் பாதுகாப்பு, நலன்புரி விடயங்களை பாதுகாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டில் அமுலில் உள்ள தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட திருத்தங்கள் தொடர்பில் ஆலோசனைகள், யோசனைகள் மற்றும் கருத்துகள் பல தரப்புகளிடம் இருந்தும் பெறப்பட்டன. இது தொடர்பில் தொழில் அமைச்சர் தலைமையில் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச தொழில் சட்டமூலம் குறித்தான வரைவு நகல் தேசிய தொழில் ஆலோசனை சபையில் நேற்றுமுன்தினம் (06.07.2023) சமர்ப்பிக்கப்பட்டது.

பல பகுதிகளாக பிரிந்திருந்த தொழில்சார் சட்டங்களையும், நடைமுறைகளையும் ஒன்றிணைந்து, நாட்டில் ஒரே தொழில் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான உத்தேச வரைவு நகலே இன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வரைவு நகல் தொடர்பான தமது நிலைப்பாட்டை, கருத்துகளை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய தொழில் ஆலோசனை சபை உறுப்பினர்கள் முன்வைக்க வேண்டும்.

## மலைச்சாரல்

### இராகலை தீ விபத்து

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

ஹற்றன் சுழற்சி நிருபர்



நுவரெலியா இராகலையில் நெடுங்குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிய தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் ஊடாக இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, தோட்ட நிர்வாகத்துடனும் தொடர்புகொண்டு மக்களுக்கு தேவையானவற்றை செய்யுமாறு அமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

தற்காலிக இடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் மேலதிக தேவைப்பாடுகளை அறிவதற்காகவும், மாற்று தங்குமிட ஏற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கமைய அவரின் பிரதிநிதியாக இ.தொ.காவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சக்திவேல் நேற்றுமுன்தினம் (06.07.2023) அத்தோட்டத்துக்கு சென்றிருந்தார்.

மக்களுடன் கலந்துரையாடிய அவர், பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன், அமைச்சரால் வழங்கப்பட்ட தகவல்களையும் பரிமாற்றிக்கொண்டார்.

மேலும், அவர்களுக்கு தேவையான மாற்று நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுத்ததுடன், தேவையான வசதிகளையும் சம்மந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி பெற்றுக் கொடுத்துள்ளார்.

# இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு சிறுநீரக கல் அகற்றும் இயந்திரம் அன்பளிப்பு

காவத்தை தினகரன் விசேட நிருபர்



இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கு சிறுநீரக கல் அகற்றும் இயந்திரமொன்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தலைமையில் கடந்த 5ஆம் திகதி அன்பளிப்பு செய்யப்பட்டது. இரத்தினபுரி போதனா வைத்தியசாலை மூலம் 68 இலட்சம் ரூபாவும் மற்றும் ஏனைய நன்கொடையாளர்களிடமிருந்து 30 இலட்சம் ரூபாவும் பெற்றுக் கொள்ளப்பட்டு மொத்தமாக 98 இலட்சம் ரூபா செலவில் இயந்திரமொன்று வைத்தியசாலைக்கு அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரி வைத்தியசாலை சிறுநீரகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 19 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதுடன் தற்போது 400 நோயாளர்கள் சிறுநீரகத்தில் கல் அகற்றிகொள்வதற்காக காத்திருக்கின்றனர். இரத்தினபுரி போதனா வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொது வாகன தரிப்பிடத்தின் மூலம் மாதாந்தம் மூன்று இலட்சம் ரூபா வருமானம் வைத்தியசாலை நிர்வாகத்துக்கு கிடைத்துள்ளது. இலங்கையில் மாதாந்தம் அதிக வருமானம் பெறும் வைத்தியசாலையாக இரத்தினபுரி போதனா வைத்தியசாலை காணப்படுகின்றது.

இந்நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய மற்றும் வைத்திய அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி நிர்மலாதேவி சுகனேஸ்வரன் 33 வருட கல்வி சேவையிலிருந்து கடந்த வாரம் ஓய்வு பெற்றார்.

அப்புத்தளையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது ஆரம்பக் கல்வியை அப்புத்தளை லிட்டில்புலவர் கொன்வன்டிலும் இடைநிலைக்கல்வியை பண்டாரவளை சென் மேரிஸ் கல்லூரியிலும் உயர் கல்வியை பண்டாரவளை சென்ஜோசப் கல்லூரியிலும் கற்றார். 1990 ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்ட இவர். நுவரெலியா புனித சவேரியார் கல்லூரியில் தனது முதல் நியமனத்தை பெற்று அங்கு 2 வருடங்கள் கடமையாற்றினார். தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக்கல்வி ஊடாக தனது ஆரம்பக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த இவர் தொடர்ந்து கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரி, வட்டகொடை தமிழ் மகா வித்தியாலயம், லிந்துலை அக்கரகந்த தமிழ் வித்தியாலயம், லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றினார். 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு பிரதி அதிபராக நியமனம் பெற்றார். அங்கு தொடர்ச்சியாக பிரதி அதிபராக சேவையாற்றிய இவர் தனது 60 ஆவது வயதில் கடந்த வாரம் ஓய்வு பெற்றார்.

# கோணக்கலை தோட்ட நிர்வாகத்துடன் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடல்!



கோணக்கலை தோட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், தோட்ட தொழிலாளர்களின் அரை சம்பளம் தொடர்பான பிரச்சினை, கள அதிகாரியின் அநாகரிகமான நடத்தை மற்றும் ஏனைய தொழிற்சங்க பிரச்சினைகள் குறித்து தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலின் போது தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்டது. சுட்டிக்காட்டப்பட்ட பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்க்க நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது.

## வடக்கின் உதயம்

# நெடுங்கேணியில் 4 பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் திறந்துவைப்பு



வவுனியா வடக்கு கல்வி வலயத்திலுள்ள நெடுங்கேணி கோட்டப் பாடசாலைகள் நான்கில் திறன் வகுப்பறைகள் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன.

புளியங்குளம் ஆரம்பப் பாடசாலை, மதியாமடு விவேகானந்த வித்தியாலயம், சின்ன பூவரசன்குளம் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், பன்றிக்கெய்தகுளம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே திறன் வகுப்பறைகள் திறந்து வைக்கப்பட்டன.

அனைத்துலக மருத்துவநல அமைப்பு, இரட்ணம் பவுண்டேஷன் ஆகியவற்றால் அமுல்படுத்தப்படும் இந்நடவடிக்கையில் நல்லையா பவுண்டேஷன், தமிழர் வட்டம் போன்ற அமைப்புகளுடன் நலன்விரும்பிகளான பாலசிங்கம் குகதீபன், மயில்வாகனம் சிறீதரன் ஆகியோரும் இணைந்துள்ளனர்.

# நெடுந்தீவில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

யாழ். விசேட நிருபர்

யாழ்.நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் 22 பேருக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் கைதுசெய்யப்பட்ட இந்திய கடற்றொழிலாளர்கள் 22 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே அவர்களில் 21 பேருக்கு 18 மாத சிறைத்தண்டனை விதித்து, அதை 5 வருடகாலத்துக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இவர்களில் ஒருவர் 16 வயதுக்கு குறைந்த சிறுவன் என்பதால் அவனது எதிர்காலத்தை கவனத்திற்கொண்டு, 10 ஆயிரம் ரூபாய் நன்னடத்தை பிணையில் நீதிமன்றம் விடுவித்துள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட கடற்றொழிலாளர்கள் 22 பேரும், கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, யாழ். நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் இவர்கள் ஜூன் 22ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்டதை தொடர்ந்து, கடந்த 5 ஆம் திகதிவரை இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இவ்வழக்கு விசாரணைகள் மீண்டும் கடந்த புதன்கிழமை (05) நடைபெற்ற போதே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

அத்துடன், இந்திய கடற்றொழிலாளர்களின் 4 படகுகளில் 2 படகுகளை அரசுடைமையாக்குமாறு உத்தரவிட்ட ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம், ஏனைய 2 படகுகளுக்கு உரிமையாளர்கள் இல்லாமையால், படகு உரிமை கோரிக்கை வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

# முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஆனந்தகுமார் வாழ்த்து!



முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ள அ.உமாமகேஸ்வரனுக்கு ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினரும் ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் செயலாளராக பணியாற்றிய உமாமகேஸ்வரன் சிறந்த நிர்வாகியாவார். இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியாகவும் திருகோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் பல்வேறு அரச பதவிகளையும் வகித்துள்ளார். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக அவர் தமிழ் மக்களுக்கு பல சேவைகளை ஆற்றியிருந்தார். முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக அவர் நியமிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சி அளிப்பதுடன் அவர் மக்களுக்கு மேலும் பல சேவைகளை ஆற்ற வேண்டுமென வாழ்த்துவதாகவும் சுப்பையா ஆனந்தகுமார் கூறியுள்ளார்.




தமிழ் சமூகத்திலுள்ள முக்கியஸ்தர்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் வழங்கும் நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் செந்தில்வேலவருக்கு கலாபூஷணம் யாழ்.பரீட் இக்பால் தமிழ் மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதி வழங்குவதை படத்தில் காணலாம். அருகில் தினகரன் பிரதம பக்க வடிவமைப்பாளர் எம்.ஆர்.எம்.றியாஸ் காணப்படுகிறார்.

# வட்டுக்கோட்டை மின்சார நிலைய பாதுகாப்பு உத்தியோகஸ்தர் மீது தாக்குதல்

யாழ்.விசேட நிருபர்

இலங்கை மின்சார சபையிடமிருந்து சிவப்பு எச்சரிக்கை துண்டு (ரெட் நோட்டீஸ்) வந்தமையால் மின்சார நிலைய சேவை நிலையத்திற்கு சென்ற நபரொருவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளார்.

தாக்குதலில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த நபரொருவர் மின்சார கட்டணத்தை உரியநேரத்தில் செலுத்த தவறியுள்ளதாக தெரிவித்து மின்சார சபையிடமிருந்து சிவப்பு எச்சரிக்கை துண்டு அனுப்பப்பட்டது. அதனையடுத்து அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தனக்கு அனுப்பப்பட்ட சிவப்பு துண்டு தொடர்பில் , வட்டுக்கோட்டையில் உள்ள மின்சார சபையின் சேவை நிலையத்திற்கு சென்று அங்கிருந்த மின்சார சபை ஊழியர்களுடன் முரண்பட்டுள்ளார்.

அதன்போது, அங்கு பாதுகாப்பு கடமையிலிருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர் அவரை வெளியேற்ற முற்பட்ட வேளை, பாதுகாப்பு உத்தியோகஸ்தர் மீது தாக்குதல் நடாத்தி விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ்ப்பாணத்தில் இம்மாதம் 'க்ளோகல்' கண்காட்சி

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழ்ப்பாணம் முற்றவெளித்திடலில் இம்மாதம் 15ஆம் 16ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு 'க்ளோகல்' கண்காட்சி ஆரம்பமாகி நடைபெறவுள்ளதுடன், பல்வேறு சேவைகளுக்கான விழிப்புணர்வு செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

'க்ளோகல்' 2023 தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சினூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதன்போது வெளிநாட்டு தொழில் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கல், ETF/EPF மற்றும் தொழில் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கல், பெற்றுக்கொண்ட திறன்களுக்கான அரசாங்க சான்றிதழ்கள், தொழிற்றுறை பயிற்சிக்கான வாய்ப்புகள், மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புகள், தொழிலாளர்களுக்கான கல்வி வாய்ப்புகள், உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளிட்ட பல சேவைகள் இடம்பெறவுள்ளன.

ஆகையால், வடமாகாண இளைஞர், யுவதிகள் இதில் கலந்துகொண்டு ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியுமென்பதுடன், WWW.GLOCAL.LK எனும் இணையத்தளத்தில் பதிவை மேற்கொள்ள முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம்

மன்னார் குறூப் நிருபர்

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை (7) காலை 11 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். வேண்டும்,வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, வீடுகளில் வைத்து கொண்டு சென்ற உறவுகள் எங்கே?, வெள்ளை வேனில் கொண்டு சென்ற பிள்ளைகள் எங்கே?', 'சரணடைந்த உறவுகள் எங்கே?' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.







# தர்காநகர் இப்றாஹீமிய்யா ஸாவியாவில் சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவம்

'ஷாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் குத்புல் அக்பர் இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (றழி) அவர்களின் 850ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு வரலாற்றுப் பிரசித்திபெற்ற தர்காநகர் இப்றாஹீமிய்யா ஸாவியாவில் வருடாந்தம் நடைபெறும் சாதுலியா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவமும் கலீபத்துல் குலபா மௌலவி அல் ஹாஜ் எம்.இஸட்.எம் முஹம்மத் ஸூஹூர் ஆலிம் (பாரி) அவர்களுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை மௌலவி முஹம்மத் மபாஸ் ஹுசைன் (பஹ்ஜி) தலைமையில் நடைபெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

அல்லாஹ்வின் அன்பர் அண்ணல் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் அருமைப் பேரர் அஷ் ஷெய்கு நூறுத்தீன் அபுல்ஹஸன் அலியுஷ் ஷாதுலி நாயகம் (ரழி) வட ஆபிரிக்காவில் கிமாரா என்ற ஊரில் ஹிஜ்ரி 593 ஷவ்வால் அல்லது துல்கஹ்தா மாதம் கி.பி 1197 இல் பிறந்தார்கள்.

சிறு வயதிலேயே கல்வியில் கவனம் செலுத்தி திருக்குர்ஆனை திறன்பட மனனம் செய்து தீனியத்தான கல்வியில் சிறந்து விளங்கிய அன்னார் தூனிஸ் நகரம் சென்று மார்க்க ஞானம் பெற்றார்கள். சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்று ஞானத்திலகமாக திகழ்ந்தார்கள். அவர்களின் அறிவு கடல் போல்விரிவடைந்தது. மேலும் ஆத்ம ஞானத்தில் அனுபவம் பெற நாடி பக்தாத் நகர் சென்றார். அங்கு மஹான் வாஸித்தி இமாம் (றஹ்) அவர்களை அணுகி ஆத்ம ஞான அறிவுகளை கேட்டுவந்தார். ஒரு நாள் ஷேஹூ வாஸித்தி இமாம் அபுல் ஹஸன் அலி ஹாயகத்தின் அந்தரங்கத்தை அறிந்து நீர் தேடும் காமிலான ஷேஹூ உமது நாட்டில் உமக்காக காத்திருக்கிறார். அங்கு போய் சேரும் என்று அறிவித்தல் கொடுத்தார்கள். இதைக் கேட்டு தம் தாய் நாடு திரும்பினார்கள்.

மெய் நிலை கண்ட ஞானியாகவும், பெரிய குத்பாவாகவும் உயர்வடைந்த மத சீலர் அப்துஸ்ஸலாம் இப்னு மஷீஷ் ஷாதுலி நாயகம் அவர்களின் ஊருக்கு அருகிலுள்ள மலை மீது தங்கியிருந்தார்கள். அவர்கள் யாரையும் தமது சீடர்களாக்கிக் கொள்ளவில்லை. இப்னு மஷீஷ் (றஹ்) இமாம் அவர்கள் 'நான் ஓர் ஈச்சம் மரம் வளர்க்கிறேன்.

அது பெரிய விருட்சமாகி பிற்காலத்தில் மக்கள் பயன் அடைவார்கள்' என கூறியிருந்தார்கள். இது ஷாதுலி நாயகம் அவர்களின் மகத்துவத்தைப் பற்றி முன் அறிவிப்பாக கூறப்பட்டதாகும். தமது பரந்த ஞானம் மக்களுக்கு பயனளிக்கும் பொருட்டு அம்மெய் ஞானத்தைப் புகட்ட இமாம் ஷாதுலி நாயகத்தை எதிர்பார்த்திருந்தார்கள். தாம் தேடும் குருநாதரை சந்தித்து ஷாதுலி நாயகம் குரு சேவையில் சில காலமும் ஈடுபட்ட பின்பு ஞான தீட்சை பெற்று செய்கு அங்கு அவர்கள் ஆணைப்படி அனுஷ்டானத்தில் ஈடுபட்டார்கள்.

அல்லாவின் அன்பராகிவிட்ட ஷாதுலி இமாம் அவர்களை மக்கள் மத்தியிலே போய் (தஹ்வா) பிரசாரம் செய்யுமாறு அல்லாஹ் அருளினான். செய்கிடம் விடை பெற்று அவர்கள் உத்தரவுப்படி முதலில் ஷாதிலா சென்றார்கள்.

ஆரம்பமாக ஷாதிலாவில் ஆத்மஞான போதனைகளைப் புரிந்தார்கள். அதனால் ஷாதுலி என்ற பெயர் வந்ததாகவும் கூறுவதுண்டு. எனவே அவர்கள் ஏற்படுத்திய ஞானப் பாதைக்கும் ஷாதுலிய்யா தரீக்கா எனப் பெயர் வரலாயிற்று.

இஸ்லாத்தின் இதயத்தை இயக்கிவிட்டு புத்துயிர் அளித்ததால் நூறுத்தீன் (மார்க்கத்தின் சுடர்) என்ற பெயர் பெற்றார்கள். மெய்ஞானி ஷாதுலி நாயகம் அவர்களின் ஞானப் பேருரைகள் அனைவர்கள் உள்ளத்தையும் கவர்ந்தன. ஷரீஅத்தை கண்டிப்பாய் கடைபிடிக்கும் படி மக்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்தார்கள். அவர்களின் அற்புதக் கருத்துக்களை கேட்க பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடினார்கள். ஷாதிலாவில் பிரசாரத்தை முடித்துக் கொண்டு ஷெய்கின் சொற்படி தூனிஸ் சென்றார்கள்.

இவ்வாறு பல ஊர்களுக்கும் சென்று ஷாதுலிய்யா தரீக்கா என்ற ஞானவழியை அமைத்து அதன் மூலம் மக்களை ஞானவான்களாக மாற்றினார்கள்.

ஷாதுலி நாயகம் அவர்கள் புகழ் ஓங்குவதை பொறுக்க முடியாத சில பொறாமைகாரர்கள் அவர்களுக்கெதிராகப் பொய்ப்பிரசாரம் செய்தார்கள். அரசுக்கெதிராக மக்களை திரட்டுவதாக சுல்தானிடம் முறையிட்டார்கள். இதனால் ஷாதுலி இமாம் அவர்களுக்குப் பல இன்னல்கள் ஏற்பட்டன. சுல்தானின் விசாரணைக்கு உட்பட்டார்கள். பொய்க்குற்றச் சாட்டுக்களை தமது தவ வலிமையால் தகர்த்து உண்மையை வெளிப்படுத்தி சுல்தான்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்றார்கள்.

ஷெய்காகச் செயலாற்றிய பின்பு குத்புல் அக்பராக உயர்ந்தார்கள். வலிமார்களின் படித்தரங்களில் குத்பு என்பதே குத்புல் அக்பரின் கருத்து. கிலாபதுல் குப்ரா எனும் மேல் அதிகாரத்தைப் பெற்று திருநபி அவர்களின் கலீபதுல் அக்பராக கடமைபுரிந்தார்கள். மாமேதை ஷாதுலி இமாம் அவர்கள் சில ஹிஸ்புகளைத்தவிர நூல் வடிவில் எந்தக் கித்தாபும் இயற்றவில்லை.


எகிப்து நாட்டில் ஹுமைசராவில் அடங்கப்பட்டுள்ள இமாம் ஷாதுலி நாயகம் (ரழி) அவர்களின் ரௌளா சரீப் (அடக்கஸ்தலம்)


கலீபதுல் குலபா முஹம்மத் ஸூஹூர் ஆலிம் பாரி

என்னுடைய நூல்கள் என் சீடர்களே என கூறிவிட்டார்கள். அநேக ஞான ஆசிரியர்களை உருவாக்கினார்கள். அந்தச் சீடர்கள் இயற்றிய நூல்கள் ஞான இரத்தினங்களாக உள்ளன.

சீடர்களும் சீடர்களின் சீடர்களும் இமாம்களாகவும் குத்புகளாகவும் பிரகாசித்து ஷாதுலிய்யா ஞானப் பாட்டின் மூலம் இஸ்லாமிய ஞானத்தை உணர்ந்து உலகெங்கிலும் பரப்பினார்கள்.

அல்லாமா பூஸரி இமாம் (றஹ்) அவர்கள் கோர்வை செய்த புர்தா ஷரீப் ஒன்றே இதனைப் புரிந்து கொள்ளப் போதுமானது.

குருநாதர் ஷாதுலி நாயகம் பல ஹஜ்ஜூக்கள் செய்துள்ளார்கள். கடைசியாக தங்கள் குடும்பத்தாருடனும் சீடர்களுடனும் ஹஜ் செய்யப்புறப்பட்டார்கள். அபுல் அஜாயி என்ற சீடரிடம் மண்வெட்டியையும் மற்றும் சில பொருட்களையும் குறிப்பாக எடுத்துக் கொள்ளும் படி பணித்தார்கள். அது பற்றி அறிய விரும்பிய சீடர்களிடம் நம்மில் யாராவது பிரயாணத்தின் போது இறந்து விட்டால் அடக்கம் செய்யத் தேவைப்படும் என்று இமாம் ஷாதுலி நாயகம் அவர்கள் கூறினார்கள்.

ஹஜ்ஜூக்குப் புறப்பட்டு ஈஜாப் பாலைவனத்திலுள்ள ஹூமைஸரா என்ற இடத்தை வந்தடைந்தார்கள். அந்த அருமைச் சீடர் அபுல் அப்பாஸ் அஹ்மதுல் முர்ஸி (ரழி) அவர்களை அருகில் அமரச் செய்து அரிய அறிவுரைகளை அளித்துவிட்டு அனைவரையும் அழைத்து தங்கள் கலீபாவாக அவரை நியமித்து அனைத்து அதிகாரங்களையும் அளித்துள்ளதாகவும் அறிவித்தார்கள். பின்னர் அன்று இரவு முழுதும் அல்லாஹ்வை தியானிப்பதிலேயே ஈடுபட்டார்கள். அப்படியே அவர்கள் ஆத்மா அல்லாஹ் அளவில் அமைதி அடைந்தது.

ஹிஜ்ரி 656 ஷவ்வால் மாதம் கி.பி 1258 இவ்வுலகை விட்டு நித்திய இல்லமாகிய மறு உலகை அடைந்தார்கள்.

அபுல்ஹஸன் அலியுஷ் ஷாதுலி நாயகம் அவர்களுக்கு சுமார் 70க்கு மேற்பட்ட அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன. அன்னவருக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் இருந்தனர்.

இத்தரீக்கா வழி நடந்தவர்கள் மகோன்னத மகான்களாக, அரும் ஆத்ம ஞானியாக அறிவுத் துறையின் அருள் ஜோதிகளாக திகழ்ந்தார்கள். அவர்களுள் மாமேதை அபுல் அப்பாஸ் அல் முர்ஸி (றஹ்), மாமேதை இப்னு அதாஉல்லாஹ் அல் இஸ்கந்தரி (றஹ்), மாமேதை அப்துல் அளீம் அல் முன்திரி (றஹ்), மாமேதை அல் மகீனுத்தீன் அல்அஸ்மர் (றஹ்), மாமேதை யாகூதுல் அர்ஷ் (றஹ்), மாமேதை அபூஸைய்யிதுல் பூஸிரி (றஹ்) போன்றவர்கள் முக்கியமானவர்கள். அறிவுலக ஆசான்களாகிய இவர்கள் நூற்றுக்கனக்கான சமய நூல்களை அறிவுலகுக்கு அளித்தவர்கள்.

ஷாதுலி நாயகம் அவர்களின் காலத்துக்குப் பின் இஸ்லாமிய உலகில் தோன்றிய பேறறிஞர்கள் பெரும்பாலானோர் புனித ஷாதுலிய்யா தரீக்கா வழி நடந்தவர்களே என்பதற்கு சரித்திரம் சான்று பகர்கின்றது. அல் ஹிகம், ஷவாகிதுல் ஹக், லதாயிபுல் மினன் போன்ற முக்கிய நூல்கள் ஷாதுலிய்யா தரீக்காவை சார்ந்த மகான்கள் அறிவுத்துறைக்கு அர்ப்பணம் செய்த பெரும் சொத்துக்களாகும்.

**பேருவளை பீ.எம். முக்தார்**

## தர்கா நகர் விஞ்ஞானப் பிரிவுக்கு புதிய மாணவர்களை இணைத்து கொள்ளும் கூட்டம்

பேருவளை விசேட நிருபர்

ரூமி ஹாஷிம் கல்வி நிலையத்தின் ஸ்தாபகத் தலைவர் கலாநிதி அல்ஹாஜ் ரூமி ஹாஷிமின் பூரண அனுசரணையுடன் தர்கா நகரில் பல வருடங்களாக வெற்றிகரமாக இயங்கி வரும் தர்கா நகர் விஞ்ஞானப் பிரிவுக்கு புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வது தொடர்பான கூட்டம் மேற்படி கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

புதிதாக மேற்படி விஞ்ஞானப் பிரிவுக்கு 150 மாணவ, மாணவிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதோடு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு இலவசமான தங்குமிட வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கல்வி நிலையத்தின் செயலாளர் ஜெஸூல் அஹம்மட் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த விஞ்ஞானக் கல்விப் பிரிவு பல வருடங்களாக சிறப்பாக இயங்கி வருவதோடு விஞ்ஞானத் துறையில் தலை சிறந்த புத்தி ஜீவிகளையும் உருவாக்கியுள்ளது.

இலங்கையின் தலை சிறந்த ஆசிரியர்களான டாக்டர் சாக்கிர் நிஸாம்தீன் (பௌதீகவியல்), றிஸ்வான் நப்ஹான் (இரசாயனவியல்), மஸ்கீன் அஸ்ஹர் (உயிரியல்), முஹம்மத் ஸப்வான், குருபரன் (இணைந்த கணிதம்) ஆகியோர் மாணவர்களுக்கு கல்விப் போதனை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஆசிரியர் முஹம்மத் ஸபானின் வழிகாட்டலின் கீழ் 2025ஆம் கல்வி ஆண்டுக்கான உயர்தர வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

இக் கூட்டத்தில் கலாநிதி ரூமி ஹாஷிம் உரையாற்றும் போது கூறியதாவது,

முஸ்லிம் சமூகத்தின் இன்றைய மூலதனமாக கல்வி திகழ்கிறது. ஒருங்கிணைந்த திட்டமிடல் மூலமே சமூகத்தின் கல்வி அபிவிருத்திக்கு வழிவகுக்கும்.

முஸ்லிம் சமூகத்திலிருந்து கூடுதலான மாணவர்கள் வைத்திய பிரிவுக்குத் தெரிவாக வேண்டும். அந்த உயர் நோக்கத்துடன் எமது கல்வி நிலையத்தின் மூலம் விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூலித் தொழிலில் ஈடுபடும் தொழிலாளியின் பிள்ளை கூலித் தொழிலாளியாக அல்லாது கல்விமான்களாக உருவாக வேண்டும். அதே போல் கடற்றொழிலாளியின் பிள்ளைகள், தோட்டத் தொழிலாளியின் பிள்ளைகள், அவர்களின் தொழில்களையே செய்யாது சிறந்த முறையில் கல்வி கற்று உயர்ந்த நிலையை அடைய வேண்டும்.

நாட்டில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இது போன்ற விஞ்ஞானக் கல்விப் பிரிவுகள் உருவாக்கப்பட வேண்டும். இதற்காக வசதி படைத்த பரோபகாரிகள் தாராளமாக முன்வந்து உதவி செய்ய வேண்டும். இதன் வெற்றிக்காக எதிர்காலத்திலும் அனைவரினதும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன் என்றார்.

## எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை உறுப்பு நாடுகள் கண்டிக்க வேண்டும்

### ஷங்காய் உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி உரை

கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற ஷங்காய் அமைப்பின் உச்சிமாநாட்டின் தலைவர் என்ற வகையில், ஏனைய உறுப்பு நாடுகளின் தலைவர்கள் மத்தியில் நிகர் நிலையில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, எந்தவொரு பிராந்தியத்தின் வளர்ச்சியும் அப்பிராந்திய நாடுகள் மத்தியில் நிலவக் கூடிய நெருக்கமான உறவின் மூலமே சாத்தியமாகும் என்றும் இது பரஸ்பர வர்த்தக அபிவிருத்திக்கு மட்டுமின்றி பரஸ்பர நம்பிக்கைக்கும் வழிவகுக்கும் என்று தெரிவித்தார்.

இந்த நிகர்நிலை உச்சி மாநாட்டில் ரஷ்ய அதிபர் புட்டின், சீன அதிபர் ஸிஜின்பிங், பாக். பிரதமர் ஷெபாஸ் ஷரீப் உட்பட உறுப்பு நாடுகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

சில உறுப்பு நாடுகள் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் ஈடுபடுவதாகவும் அவ்வாறான நாடுகள் விமர்சிக்கப்பட வேண்டியவை எனக் குறிப்பிட்ட அவர், பிராந்திய மற்றும் உலக அமைதிக்கு பயங்கரவாதம் அச்சுறுத்தல் என்றார்.

ஷங்காய் அமைப்பை ஸ்திரப்படுத்த இந்தியா ஐந்து தூண்களை அமைக்கவுள்ளது. புதிய தொழில் முயற்சிகள் மற்றும் கண்டு பிடிப்புகள், பாரம்பரிய மருத்துவம், இளைஞர் சக்தி, டிஜிட்டல் பயன்பாடு மற்றும் பௌத்த பாரம்பரியத்தை பகிர்தல் என்பனவே அவை.

இந்திய தலைமைத்துவத்தின் கீழ் இளம் விஞ்ஞானிகளின் பிரிவு, இளம் எழுத்தாளர் பிரிவு, இளம் உள்ளக புத்திஜீவிகள் அமைப்பு, இளைஞர் அமைப்பு என்பன உருவாக்கப்பட்டன. ஐ.நா. உட்பட உலக அமைப்புகளில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கு ஷங்காய் அமைப்பு குரல் கொடுக்க வேண்டும் என்றும் தனது உரையில் மோடி குறிப்பிட்டிருந்தார்.

## கொழும்பு – ஸ்ரீநகர் நேரடி சுற்றுலாப் பயணங்கள் நடத்துவதற்கான பேச்சு கொழும்பில் நடக்கும்

இலங்கை சுற்றுலாப் பயணிகளை நேரடியாக காஷ்மீருக்கு வரவழைக்கும் வகையில் கொழும்பு ஸ்ரீநகர் பயண ஏற்பாடுகளை செய்வதற்கு காஷ்மீர், ஜம்மு, லடாக் சுற்றுலா முகவர்கள், அதிகாரிகள் அடங்கிய குழு கொழும்பு வந்துள்ளது.

கொழும்பில் கடந்த 6ஆம் திகதி ஆரம்பமான இந்திய சுற்றுலா முகவர் சங்க மாநாடு ஞாயிறுவரை நடைபெறவுள்ளது. இச்சங்கத்தின் 67 ஆவது மாநாட்டில் ஐநூறுக்கும் மேற்பட்ட இந்திய சுற்றுலா முகவர் நிலைய, விமான சேவை நிறுவன, ஹோட்டல்துறை சார்ந்த பல தூதுக்குழுக்கள் கலந்து கொள்கின்றன. இக் குழுக்கள் இலங்கை சுற்றுலா முகவர்கள், ஸ்ரீலங்கன் விமான சேவை பிரதிநிதிகள் மற்றும் ஹோட்டல் பிரதிநிதிகளுடன் இரு நாடுகளுக்கும் இடையில் சுற்றுலாத் துறையை எவ்வாறு மேலும் வளர்ச்சியடையச் செய்வது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன.

இலங்கை வந்துள்ள ஜம்மு – காஷ்மீர் சுற்றுலா முகவர்கள் காஷ்மீர் பிராந்தியம் இலங்கை பயணிகளுக்கு அளிக்கக்கூடிய வசதிகள், காஷ்மீரின் சிறப்புகள் தொடர்பாக இலங்கை முகவர்களுக்கு விளக்குவார்கள் என்றும், ஸ்ரீ லங்கன் விமான நிறுவன அதிகாரிகளுடன் கொழும்பு ஸ்ரீ நகர் விமான சேவையின் சாத்தியம் குறித்து உரையாடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் தூதுக் குழுவில் ஜம்மு – காஷ்மீரின் சுற்றுலா வர்த்தகத்தின் சிரேஷ்ட உறுப்பினரான அப்ரிக்சிங் உள்ளடக்கியுள்ளார். இக் கொழும்பு மாநாட்டின் பின்னர் கொழும்பு – காஷ்மீர் உறவு மேலும் நெருக்கமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சீன இளைஞர் மத்தியில் அதிகரிக்கும் வேலைவாய்ப்பின்மை

## கட்டுப்படுத்தாவிட்டால் அரசியல் பிரச்சினையாகும் என எச்சரிக்கை

சீனாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலை காரணமாக இளைஞர் மத்தியில் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதாகவும், இப்பிரச்சினை முறையாகக் கையாளப்படாவிட்டால் கைமீறிப் போய் அரசியல் பிரச்சினையாக உருவெடுக்கக் கூடும் என்றும் சீனாவின் முக்கிய பொருளாதார நிபுணராக அறியப்படும் லீ யுவான்சுன் சீன அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சீன ஜனாதிபதிக்கு பொருளாதார ஆலோசகராக விளங்கிய இவர், கடந்த ஆண்டு ஏப்ரலில் உயர் மட்ட முடிவுகளை எடுக்கும் அரசியல் சபைக்கு விரிவுரை நிகழ்த்தியுமிருக்கிறார். சீனாவின் ரெம்னின் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இவர் வெளியிட்ட 110 பக்க ஆய்வறிக்கையில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ள அவர், இளைஞர் விவகாரம் முறையாக நிர்வகிக்கப்படாவிட்டால் வேறு சமூகப் பிரச்சினைகளையும் அது தோற்றுவிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் 1624 வயதுக்குட்பட்ட இளைஞர் மத்தியில் வேலைவாய்ப்பின்மை 20.8 சதவீதமாக கடந்த மே மாதம் காணப்பட்டதாகவும், மேலதிகமாக மில்லியன் கணக்கில் புதிய பட்டதாரிகள் வேலைவாய்ப்பு சந்தைக்கு வரும்போது நிலைமை மேலும் மோசமடையும் என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## ஆசிரியர் கலாசாலை ஒன்று கூடலும் பணிநிறைவு பாராட்டு விழாவும்

காரைதீவு குறூப் நிருபர்

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை 91/92 ஆம் ஆண்டு அணியின் மூன்றாவது ஒன்று கூடலும் பணிநிறைவு பாராட்டு விழாவும் இன்று(8) சனிக்கிழமை மல்வத்தையில் நடைபெறும். அந்த அணியின் உறுப்பினர்களான மல்வத்தையைச் சேர்ந்த அதிபர் பொன் நடராஜன் ஆசிரியை திருமதி வசந்தினி நடராஜன் ஆகியோர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதால் அவர்களுக்கான பணிநிறைவு பாராட்டு பிரியாவிடை வைபவம் மல்வத்தையில் நடைபெறும்.

இதற்கென்று அந்த அணியை சேர்ந்த உறுப்பினர்கள் திருகோணமலை தொடக்கம் திருக்கோவில் வரையான பிரதேசங்களில் இருந்து வருகிறார்கள்.

# இறக்குவானை பரியோவான் தமிழ் தேசிய கல்லூரியின் 136ஆவது அகவை நிகழ்வுகள்





















































இறக்குவானை பரியோவான் தமிழ் தேசிய கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி 2006 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஏற்பாட்டில் ஜூலை 1,2,3 ஆகிய திகதிகளில் இறக்குவானை பொது மைதானத்தில் அதிபர் பூபாலபிள்ளை கமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. கல்லூரியின் 136 ஆவது அகவை நிறைவை முன்னிட்டு பேரணியொன்றும் முன்னெடுக்கப்பட்டது. பாடசாலையின் அதிபர், முன்னாள் அதிபர்கள், முன்னாள் ஆசிரியர்கள், தற்போதைய ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இந்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 2019 ஆம் ஆண்டு சாதாரண தர மாணவர்கள் சம்பியனாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1998 ஆம் ஆண்டு சாதாரண தர மாணவர்கள் 'ரனர்ஸப்' இடத்தைப் பெற்றுக் கொண்டனர். தொடரின் நாயகனாக மைக்கல் எட்டணி (1998), சிறந்த துடுப்பாட்ட வீரராக ஆறுமுகம் மிதுன் அபிஷேக் (2019), சிறந்த பந்துவீச்சாளராக யோகேஸ்வரன் தனுஜன் (2019) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# மேற்கிந்திய தீவுகள் அணியையும் இலகுவாக வீழ்த்தியது இலங்கை

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான உலகக் கிண்ண தகுதிகாண் தொடரின் கடைசி சுப்பர் சிக்ஸ் போட்டியிலும் இலங்கை அணி 8 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது.

ஏற்கனவே இந்தத் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறி உலகக் கிண்ணத்திற்கும் தகுதி பெற்றுள்ள இலங்கை அணி தொடர்ந்து மற்றொரு வெற்றியை எதிர்பார்த்தே உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறாத மேற்கிந்திய தீவுகளை எதிர்கொண்டது.

ஹராரேவில் நேற்று (07) நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை அணியில் வனிந்து ஹசரங்க இடம்பெறாத நிலையில் துஷான் ஹேமந்த அழைக்கப்பட்டதோடு சஹன் ஆரச்சிகே தனது முதலாவது சர்வதேச போட்டியில் களமிறங்கினார்.



இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட மேற்கிந்திய தீவுகள் அணி ஆரம்பம் தொட்டே மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது. அந்த அணி முக்கிய இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தபோதும் மத்திய வரிசையில் கீசி கார்டி ஒரு முனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடி மேற்கிந்திய தீவுகளின் ஓட்டங்களை அதிகரித்தார்.

மேற்கிந்திய தீவுகள் அணி 155 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 9 ஆவது விக்கெட்டுக்கு கார்டி, கெவின் சின்கிளயருடன் இணைந்து 63 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார். இதன்மூலம் 200 ஓட்டங்களை கடந்த மேற்கிந்திய தீவுகள் இறுதியில் 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 243 ஓட்டங்களை பெற்றது. 69 பந்துகளுக்கு முகம்கெடுத்த கார்டி 6 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 87 ஓட்டங்களை பெற்றார்.

இதன்போது இலங்கை சார்பில் மீண்டும் ஒருமுறை சிறப்பாக செயற்பட்ட சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். தனது இரண்டாவது ஒருநாள் போட்டியில் களமிறங்கிய சுழற்பந்து வீச்சாளர் ஹேமந்த 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்நிலையில் 244 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலெடுத்தாடிய இலங்கை அணிக்கு பத்தும் நிசங்க மற்றும் திமுத் கருணாரத்ன 190 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து கொண்டனர்.

இதன்போது ஒருநாள் போட்டிகளில் தனது இரண்டாவது சதத்தை பெற்ற நிசங்க 113 பந்துகளில் 14 பௌண்டரிகளுடன் 104 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக ஆடி வந்த பத்தும் நிசங்கவும் 92 பந்துகளில் 7 பௌண்டரிகளுடன் 83 ஓட்டங்களை பெற்ற நிலையில் வெளியேறினார்.

எனினும் இலங்கை அணி 44.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றி இலக்கான 244 ஓட்டங்களை எட்டியது.

# வழக்கில் 'நடுவர் மன்றத்தை' தவிர்க்க குணதிலக்க முயற்சி



டி20 உலகக் கிண்ண தொடருக்காக அவுஸ்திரேலியா சென்றிருந்தபோது பெண் ஒருவர் மீது பாலியல் தாக்குதல் நடத்தியதாக குற்றம்சாட்டப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க தனது வழக்கில் நடுவர் மன்றத்தை தவிர்க்க தீர்மானித்துள்ளார்.

குணதிலக்க மீதான மூன்று குற்றச்சாட்டுகளை அரச வழக்கறிஞர் இந்த ஆண்டு ஆரம்பத்தில் வாபஸ் பெற்ற நிலையில், ஒப்புதல் இன்றி பாலியல் உறவில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்கு 32 வயதான குணதிலக்க முகம்கொடுத்துள்ளார்.

இந்நிலையில் சிட்னியின் டவுனின் சென்டர் மாவட்ட நீதிமன்றத்தில் அவர் நேற்று (07) தோன்றினார். இதன்போது நீதிபதி மாத்திரம் வழக்கு விசாரணையை நடத்துவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் வரை வழக்கு ஏற்பாடுகளை ஒத்திவைக்கும்படி அவரது வழக்கறிஞர் கோட்டுக்கொண்டார்.

வரும் ஜூலை 24 ஆம் திகதி நடைபெறவுள்ள இது தொடர்பிலான விசாரணையின்போது அரச வழக்கறிஞர்கள் இந்த விண்ணப்பத்தை எதிர்க்கவுள்ளதாக கூறப்பட்டுள்ளது. 2022 நவம்பரில் டின்டர் டேடிங் தளத்தின் மூலம் தொடர்பை ஏற்படுத்திய 29 வயது பெண்ணை சிட்னியின் ஓபேரா மதுபான விடுதியில் தனுஷ்க குணதிலக்க சந்தித்ததாக பொலிஸார் குற்றம்சாட்டியுள்ளனர். பின்னர் இருவரும் சிட்னியின் கிழக்கு புறநகரில் இருக்கும் பெண்ணின் வீட்டுக்கு சென்றுள்ளனர். தொடர்ந்து குணதிலக்க அந்தப் பெண்ணை மூச்சுத் திணறவைத்து ஆணுறை அணியாது வலுக்கட்டாயமாக பாலியல் உறவில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதன்போது அவர் அந்தப் பெண்ணை 20 விநாடிகளுக்கு மேல் மூச்சுத் திணற வைத்ததாகவும் ஒரு சந்தர்ப்பத்தில் அந்தப் பெண் அவரது கையை அகற்ற முயன்றபோது அவர் தனது பிடியை மேலும் இறுக்கியதாகவும் பொலிஸார் குற்றம்சாட்டியுள்ளனர்.

இலங்கை அணியுடன் நாடு திரும்புவதற்கான விமானத்தில் ஏறுவதற்கு சற்று முன்னரே கடந்த நவம்பர் 6 ஆம் திகதி சிட்னியின் ஹியாட் ரெஜென்சி ஹோட்டலில் வைத்து குணதிலக்க கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.





கொழும்பு சுகததாச அரங்கில் நேற்று (07) நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவின் கால்பந்து போட்டியில் தொடர்ந்து சம்பியனான வட மாகாண அணியையும், இந்தப் போட்டியில் இரண்டு கோல்களை பெற்று சிறந்த வீரராக தெரிவான அந்த அணியின் வி. கீதனையும் படங்களில் காணலாம்.

# பங்களாதேஷ் தலைவராக தமீமுக்கு பதில் லிட்டோன்



தமீம் இக்பால் திடீர் ஓய்வை அறிவித்த நிலையில் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான எஞ்சிய இரண்டு ஒருநாள் போட்டிகளுக்குமான பங்களாதேஷ் அணியின் தலைவராக லிட்டோன் தாஸ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

லிட்டோன் இதற்கு முன்னர் பங்களாதேஷ் அணியின் தலைவராக செயற்பட்டபோதும் பதில் தலைவராகவே இருந்துள்ளார். ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அவர் உப தலைவராக உள்ளார்.

இந்நிலையில் அவர் பதில் தலைவராகவே இந்தத் தொடரில் எஞ்சிய போட்டிகளுக்கு மாத்திரம் இருப்பார் என்று தெரியவருகிறது. ஒருநாள் அணியின் தலைமை பொறுப்பு ஷகீப் அல் ஹசனுக்கு வழங்கப்பட அதிக வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

உலகக் கிண்ணம் நடப்பதற்கு இன்னும் மூன்று மாதங்களே எஞ்சியுள்ள நிலையில் ஆப்கான் தொடரின் பாதியில் தமீம் இக்பால் கடந்த வியாழக்கிழமை (06) சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து திடீர் ஓய்வை அறிவித்தார்.

ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி தோல்வி அடைந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று (08) சிட்டகொனில் நடைபெறவுள்ளது.

# சோண்டர்ஸ்–மொரகஸ்முல்ல அணிகள் இன்றும் ஜாவாலேன்–மாளிகாவத்தை யூத் நாளையும் மோதல்



சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் சோண்டர்ஸ் மற்றும் மொரகஸ்முல்ல விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான போட்டி இன்று (08) கொழும்பு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறுவதோடு ஜாவாலேன் மற்றும் மாளிகாவத்தை யூத் விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான போட்டி நாளை (09) மாலை 3.30க்கு ஆரம்பமாகும். இதுவரை நடந்த போட்டிகளின்படி முன்னிலையில் உள்ள கொழும்பு கால்பந்து கழகத்திற்கு இந்த வாரத்தில் போட்டிகள் இல்லை.

இதுவரை கொழும்பு கால்பந்து கழகம் மூன்று போட்டிகளை எதிர்கொண்டு ஒரு போட்டியில் வெற்றியீட்டி 2வது போட்டியை வெற்றி தோல்வி இன்றி நிறைவு செய்துள்ளது. கொழும்பு கால்பந்து கழகம் 3–1 என்ற கோல் கணக்கில் மாளிகாவத்தை யூத் அணியை வீழ்த்தியதோடு 1–1 என்ற கோல் அடிப்படையில் மொரகஸ்முல்ல விளையாட்டு கழகத்துடனான போட்டியை சமநிலை செய்தது. அதேபோன்று சோண்டர்ஸ் உடனான போட்டி கோலின்றி சமநிலை பெற்றதால் கொழும்பு அணி புள்ளிப் பட்டியலில் 5 புள்ளிகளை பெற்றுள்ளது.

மொரகஸ்முல்ல விளையாட்டுக் கழகம் மூன்று போட்டிகளில் ஒரு போட்டியில் வெற்றியீட்டி ஒரு போட்டியில் தோல்வியுற்றதோடு மற்றைய ஆட்டத்தை சமநிலை செய்ததால் 4 புள்ளிகளை பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. மொரகஸ்முல்ல விளையாட்டு கழகம் 2–0 என்ற கோல்களால் மாளிகாவத்தை யூத் அணியை வீழ்த்தியதோடு, ஜாவாலேனிடம் 4–2 என்ற கோல் கணக்கில் தோல்வியை சந்தித்தது.

ஜாவாலேன் பங்கேற்ற இரண்டு போட்டிகளிலும் ஒரு வெற்றி மற்றும் சமநிலையுடன் 4 புள்ளிகளை பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளது. ஜாவாலேனிடம் மொரகஸ்முல்ல தோல்வியை சந்தித்ததோடு ஜாவாலேன் – சோண்டர்ஸ் போட்டி 2–2 என சமநிலை பெற்றது.

சோண்டர்ஸ் பங்கேற்ற இரு போட்டிகளும் வெற்றி தோல்வி இன்றி முடிவுற்று 2 புள்ளிகளை அந்த அணி பெற்றிருப்பதோடு மாளிகாவத்தை யூத் பங்கேற்ற இரு போட்டிகளிலும் தோல்வியை சந்தித்து புள்ளிப் பட்டியலில் கடைசி இடத்தில் காணப்படுகிறது.

# நியூசி. தொடருக்கு இலங்கை மகளிர் டி20 குழாம் அறிவிப்பு

நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடருக்கான 15 பேர் கொண்ட இலங்கை மகளிர் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து மகளிர் அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 2–1 என இலங்கை மகளிர் அணி கைப்பற்றிய நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் இன்று (08) பி. சரா ஓவல் மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் தொடருக்கான இலங்கை குழாத்தின் தலைவியாக சாமரி அத்தபத்து செயற்படவுள்ளார். அதேநேரம் இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ள இந்த குழாத்தில் ஒருநாள் தொடரிலிருந்து எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை.



எனவே ஒருநாள் தொடரில் விளையாடிய அனைத்து வீராங்கனைகளுக்கும் டி20 தொடரிலும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடரின் இரண்டு மற்றும் மூன்றாவது போட்டிகள் வரும் 10 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இலங்கை மகளிர் குழாம்: சாமரி அத்தபத்து (தலைவி), விஷ்மி குணரத்ன, ஹர்சிதா சமரவிக்ரம, நிலக்ஷி டி சில்வா, கவீஷா டில்ஹாரி, அனுஷ்கா சஞ்சீவனி, ஓசதி ரணசிங்க, காவ்யா கவிந்தி, சுகந்திகா குமாரி, இனோகா ரணவீர, உதேசிகா பிரபோதனி, ஹன்சிமா கருணாரத்ன, இனோஷா பெர்னாண்டோ, இமேஷா டுலானி, ஹாசினி பெரேரா, நியூசி.

உலகக் கிண்ண தகுதிகாண்:

# இறுதிப் போட்டியில் இலங்கை நெதர்லாந்துடன் பலப்பரீட்சை

உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் தீர்க்கமான போட்டியில் ஸ்கொட்லாந்தை 4 விக்கெட்டுகளால் வீழ்த்திய நெதர்லாந்து அணி உலகக் கிண்ணத்திற்கு 10 ஆவது அணியாக தகுதி பெற்றதோடு இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் நாளை (9) இலங்கை அணியை எதிர்கொள்ளவுள்ளது.

வெற்றிபெறும் அணி உலகக் கிண்ணத்திற்கு தகுதிபெறும் என்ற நிலையில் புலவாயோவில் கடந்த வியாழக்கிழமை (06) ஸ்கொட்லாந்தை எதிர்கொண்ட நெதர்லாந்து அணிக்கு 278 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.




எனினும் உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெற இந்த இலக்கை 45 ஓட்டங்களில் எட்ட வேண்டும் என்ற நிலையில் நெதர்லாந்து அணி 42.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. அபாரமாக ஆடிய பேஸ் டி லீட் 92 பந்துகளில் 123 ஓட்டங்களை பெற்றார்.

இந்த வெற்றியுடன் இந்தியாவில் வரும் ஒக்டோபரில் ஆரம்பமாகவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கு எஞ்சி இரண்டு இடங்களுக்குமான அணிகள் தேர்வாகியுள்ளன.

இந்நிலையில் உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் சம்பியன் அணியை தீர்மானிக்கும் இறுதிப் போட்டி ஹராரேவில் நாளை நண்பகல் 12.30க்கு ஆரம்பமாகவுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூலை மாதம் 8ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.